பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 23 வெள்ளிக்கிழமை 11.01.2019 கதிர் 67

### இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டமை குறித்து நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

அவருக்கும் சுமந்திரனுக்கும் இடையிலிருந்த நெருக்கத்தை அவர்கள் ஏன் ஆளுநர் நியமனத்தின் பின்னரும் பக்கம் 02

# போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேசப் பொறிமுறை கட்டாயம்!

## சபையில் சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்



கொழும்பு, ஜனவரி. 11

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் சர்வதேசக் குற்றங்களே. எனவே, இவற்றை விசாரித்துப் பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி வழங்கச் சர்வதேச விசாரணையே வேண்டும்.

- இவ்வாறு சபையில் நேற்று வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 11

## இந்திய மீனவர்கள் எட்டு பேர் விடுதலை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 11

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டு பக்கம் 11

## சர்வதேசத் தலையீடு மூலமே தமிழருக்குத் தீர்வு கிடைக்கும்

### கூறுகின்றார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 11

சர்வதேச அழுத்தத்தின் ஊடாகவே தமிழர்களுக்கு அரசியல் தீர்வு சாத்தியப்படும் என பக்கம் 11

## ஜனாதிபதி வேட்பாளர் குறித்து முடிவில்லை என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜன. 11

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்யாரைவேட்பாளராக நிறுத்துவது என எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பக்கம் 11

### 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல்

## 12ஆவது சந்தேக நபரும் நேற்று அடையாளம் காட்டப்பட்டார்!

கொழும்பு, ஜன. 11

2008ஆம் ஆண்டு கொழும்பில் 11தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுகாணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான பக்கம் 11

## அரசியல் சதி நடந்திராவிடின் கடன் சுமை குறைந்திருக்கும்

### சபையில் கூறினார் பிரதமர்

கொழும்பு, ஜன. 11

நாட்டில் 51நாட்கள் அரசியல் நெருக்கடி ஏற்படாதிருக்காவிட்டால்கடன்சுமைகளைப் பெரும்பாலும் குறைத் பக்கம் 11

## 6 பேரை சுட்டுக்கொலை செய்த இருவருக்கு தூக்குத்தண்டனை!

கொழும்பு, ஜன. 11

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் 6 பேரை சுட்டுக்கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளிகளாக பக்கம் 11

## ஜனாதிபதி வேட்பாளராக மீண்டும் மைத்திரிபாலவே

### கூறுகிறார் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஜன. 11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இம்முறையும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பெயரிடப்பட்டுள்ளார் என நாடாளு பக்கம் 11

## பதவி துறக்கிறார் ஐ.தே.க. எம்.பி. சபைக்கு வருகின்றார் சந்திரிகா!

கொழும்பு, ஜன. 11

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியொருவர் விரைவில் பதவி பக்கம் 02

## ஜனாதிபதி செயலக உத்தரவில் வெடுக்குநாறி மலையில் ஆய்வு

வவுனியா, ஜன. 11

ஜனாதிபதிசெயலகஅதிகாரி மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு பக்கம் 02

## 9 மாகாணங்களுக்கும் ஒரே தினத்தில் தேர்தல்

### சம்பிக்க ரணவக்க கோரிக்கை

கொழும்பு, ஜன. 11

எந்த முறையில் தேர்தலை நடத்தவேண்டும் என்ற முடிவை விரைவில் எடுத்துசட்டவரைவைநிறைவேற்றி பக்கம் 11

## சம்பந்தனைச் சந்தித்தார் கிழக்கு மாகாண ஆளுநர்



திருமலை, ஜன. 11

கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பக்கம் 11

## அரசியல் கைதியின் உடல்நிலை மோசம்!

கொழும்பு, ஜன. 11

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 5ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதியின் உடல்நிலை மோசமடைந்துள்ளது.

கிளிநொச்சி வட் பக்கம் 11

## விசாரணைகளின்றி 15 வருடங்கள் சிறையில் வாடுவது நியாயமானதா?

### அரசியல் கைதிகள் குறித்து ஜே.வி.பி. கேள்வி



கொழும்பு, ஜன. 11

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பலர் விசாரணைகள் இன்றி வருடக்கணக்கில் சிறையில் வாழ்கின்றனர். அவர்கள் தங்கள் பக்கம் 11

## மீற்றர் பொருத்தப்படாத ஓட்டோ உரிமையாளர்கள் மீது நடவடிக்கை

### யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மாநகர எல் பக்கம் 02

# மாத்திரையால் போதை ஏறிய 3 மாணவர்கள் ஆஸ்பத்திரியில்!

## வலி.வடக்கில் நேற்று பரபரப்பு

–எஸ்.நிதர்ஷன்–

வலி வடக்கு மீள்குடியேற்றப்பகுதிக்குட்டபட்ட பாடசாலை ஒன்றில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் 14 வயதுடைய மாணவர்கள் மூவர் போதை மாத்திரைகள் உட்கொண்டு போதை ஏறிய நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பலருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்த நிலையில் இதனால் அப் பகுதியில் பெரும் பரபரப்பும் ஏற்பட்டுருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருபவை வருமாறு:–

நல்லிணக்க புரத்தில் உள்ள இரு மாணவர்களும் தெல்லிப்பழையை சேர்ந்த ஒரு மாணவனும் இணைந்து நேற்று காலை பாடசாலைக்குள் சென்றுள்ளனர். அதில் நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தனது சகோதரனிடம் (வயது 16) இருந்து போதை மாத்திரைகளை (20 மாத்திரைகள்) பெற்று வந்துள்ளார்.

அதில் ஒருவர் 5 மாத்திரையும் மற்ற மாணவன் 4 மாத்திரைகளையும் மூன்றாவது மாணவன் 3 மாத்திரைகளையும் உட்கொண்டுள்ளனர். பின்னர் வகுப்பறையினுள் மயங்கிய நிலையில் கிடந்துள்ளனர்.

இந்த விடயத்தை அறிந்த பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து அவர்களை வெளியே அழைத்து சென்று விசாரணை செய்துள்ளனர் அப்போது அவர்கள் தாறுமாறாக தம்மை அறியாமல் பேசத்தொடங்கியுள்ளனர். நிலைமையை அறிந்த அதிபர் இந்த மாணவர்களைத் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

பின்னர் வைத்தியசாலையில் இருந்து சுகாதார வைத்திய அதிகாரிக்கு குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டு, சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலைக்கு சென்று மாணவர்களிடம் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அந்த மாத்திரைகள் அவர்களது சுற்றயல்களில் உள்ள மருந்தகங்களில் சாதாரணமாக கிடைப்பதாகவும், தற்போது பயன்படுத்திய மாத்திரை தனது சகோதரனிடம் இருந்து பெற்றுக் கொண்டதாகவும் ஒரு மாணவன் விசாரணையில் தெரிவித்திருந்தார்.

அவர்கள் எந்த மருந்தகங்களில் இந்த மாத்திரைகளைக் கொள்வனவு செய்பவர்கள் என்ற தகவலைப் பெற்றுக்கொண்டு மாவட்டபுரத்துக்கு அண்மையில் உள்ள அந்த இரு மருந்தகங்களுக்கும் சுகாதார வைத்திய அதிகாரி குழுவினர் சென்று பரிசோதனை மேற்கொண்டமையுடன் அங்கிருந்த மாத்திரைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் அந்த மருந்தகங்களுக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்துச் சென்றுள்ளனர். இந்த விடயம் நேற்று அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

## ஏழாலை தெற்கு வசந்த நாகபூசணி அம்பாள் கொடியேற்றம்

ஏழாலை தெற்கு, வசந்தபுரம் களவாவோடை அருள்மிகு வசந்தநாகபூசணி அம்பாள் தேவஸ்தான கொடியேற்றம இன்று காலை 9 மணிக்கு பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 18 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 19 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 20 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## எரிபொருள்களின் விலை குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் எரிபொருள் விலைகளில் திருத்தங்களை மேற்கொள்ளும் விலை நிர்ணய குழு நேற்று கூடியது. இந்த கூட்டத்தின் போது விலைசூத்திரத்திற்கு அமைய எரிபொருளின் விலையைக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், 92 மற்றும் 95 ஒக்டேன் ரக பெட்ரோல் ஒரு லிட்டரின் விலை 2 ரூபாவால்குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 101 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒட்டோ டீசல் 99 ரூபாவிற்கும், 121 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட சுப்பர் டீசல் 118 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படவுள்ளனர் எனவும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## கடமையைப் பொறுப்பேற்றார் தயாசிறி

கொழும்பு, ஜன. 11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமனம் பெற்ற தயாசிறி ஜயசேகர தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

நேற்றுக் காலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் மதவழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் தமது கடமைகளை அவர் பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## பதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறக்கவுள்ளார்என்றுசிறிகொத்தா வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

ஐ.தே.க. தலைமைப்பீடத்தின் ஆலோசனையின் பிரகாரமே இந்த எம்.பி. பதவி விலகுகிறார் எனக் கூறப்படுகின்றது. சட்டம் மற்றும் அரசமைப்புத் துறையில் இவர் தேர்ச்சி பெற்றவராவார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் மீண்டும் நாடாளுமன்றம்வருவதற்குவாய்ப்பளிக்கும் நோக்கிலேயே இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும், இது குறித்து இன்னும் அதிகாரப்பூர்வமான தகவல்கள் வெளியாகவில்லை.

ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர்கள் சிலரே இதற்கான கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவிடயத்தில் சு.க. எம்.பிக்கள் சிலருக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சிலவேளை, ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் எம்.பியாக நாடாளுமன்றம் வந்தாலும், சுதந்திரக்கட்சி எம்.பிக்களின் ஆசியுடன் சந்திரிகா அம்மையார் சுயாதீனமாகவே செயற்படுவார். அவருக்கு உயர்நிலை பதவியொன்றும் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹிந்த–மைத்திரிகூட்டணிக்கு அரசியல் ரீதியில் மரண அடி கொடுப்பதற்காகவே ஐ.தே.கவால் இவ்வியூகம் வகுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. எனினும், இது குறித்து சந்திரிகா அம்மையாரின் நிலைப்பாடு என்னவென்பது இன்னும் வெளியாகவில்லை.

தேர்தலில் போட்டியிடாத மற்றும் முன்கூட்டியே தேசியப்பட்டியலில் உள்ளடக்கப்படாத நபரொருவரை எம்.பியாக நியமிப்பதற்குரிய சட்டரீதியான ஏற்பாட்டுக்கு இடமிருக்கின்றது.

(ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிக்காட்டவில்லை என்ற கேள்விக்கு இன்று பதில்தருவேன் எனக் கோடி காட்டியிருந்தேன்.

இதற்கிடையில் நேற்று இப்பத்தியை வாசித்துவிட்டு ஓர் அன்பர் தொலைபேசி மூலம் என்னிடம் ஒரு கேள்வி எழுப்பியிருந்தார்.

*“நீங்கள் குறிப்பிடுகின்றமை போல சுமந்திரனுக்கும் சுரேன் ராகவனுக்கும் இடையில் இவ்வளவு கொள்கை ரீதியான இணக்கமும் நெருக்கமும் இருக்குமானால் சுரேன் ராகவன் ஏன் கூட்டமைப்பில் சுமந்திரனுடன் சேர்ந்து செயற்படவில்லை? அதுவும் மும்மொழி ஆளுமையும், தமிழர் தேசம் பற்றிய சிந்தனைச் செழுமையும் உள்ள ஒருவரை ஏன் சுமந்திரன் போன்றோர் கூட்டமைப்புக்குள் அரவணைத்துக் கொள்ளவில்லை?”* – என்று அவர் கேள்வி எழுப்பினார்.

என் மனதிலும் இத்தகைய கேள்வி உள்ளது. நாளைய (இன்றைய) பத்தியில் அதற்குப் பதில் தருவேன் என்று அவரிடம் கூறியிருந்தேன்.

ஒரே வரியில் அதற்குப் பதில் கூறலாம். அதுசுரேன்ராகவன்விடயத்தில் மட்டுமல்ல, மற்றும் பல திறமைசாலிகள் விடயத்திலும் கூட அப்படியே பொருந்தும்.

அந்தப் பதில்:– *“ஓர் உறைக்குள் ஒரு வாள்தான் இருக்க முடியும்!”*

–இந்தப்பதிலுக்குரிய கருத்தை – விளக்கத்தை – வியாக்கியானத்தை – வாசகர்களே தமக்குள் தாமே செய்து புரிந்துகொள்வார்களாக!

சுரேன் ராகவன் ஆளுநர் நியமனம்பெற்ற பின்னர் அவரும் சுமந்திரனும் உரையாடினர் எனத் தெரிகின்றது.

தங்களுக்குள் நெருக்கம் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தினால் இது அவரவர்களின் தனித் தனி அரசியல் பயணத்துக்கும், பதவி வழிக் கடப்பாட்டை நிறைவு செய்வதிலும் இடைஞ்சல்களை ஏற்படுத்தும் எனக் கருதி, அந்த நெருக்கம் குறித்து இருவருமே அதிகம் வெளிப்படுத்துவதில்லை என்று தங்களுக்குள் ஓர் எழுதாத உடன்பாடு கண்டனர் என்றும் அறிய வந்தது.

அதனால்தான் அந்த நெருக்கம் அதிகம் வெளிவராமல் அமுங்கிப் போனது. அதனை நான் அம்பலப்படுத்தி விட்டேன் என்று இருவருமே என் மீது கோபம் கொள்வரோ தெரியாது!

இனி, சுரேன் ராகவனை ஆளுநராக நியமிக்கும் முடிவை ஜனாதிபதி ஏன் எடுத்தார் என்ற விடயத்துக்கு வருவோம்.

கடைசி நேரம் வரை பழையவரான சிறிசேன குரேயை இப் பதவிக்கு நியமிக்கவே மைத்திரி நினைத்திருந்தார்.

ஆனால், மாகாண ஆளுநர்களாக ஏற்கனவே இரண்டு முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டு விட்ட நிலையில்தமிழர்ஒருவராவது அந்தப் பதவிக்குக் கட்டாயம் நியமிக்கப்படுவது அவசியம் என்று ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

அதனையடுத்து, வேறு வழியின்றி ஒரு தமிழரை அப்பதவிக்குத் தேடவேண்டியவரானார் ஜனாதிபதி.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் மனதில் இருந்த முக்கிய நபர் தமிழ் இலத்திரனியல் ஊடகம் ஒன்றின் நிர்வாகிதான். அவருக்கு மிக நெருக்கமானவர். நம்பிக்கையானவர். மைத்திரி, மஹிந்த, கோட்டா என்று எல்லாத் தரப்புகளுடனும் சரளமாகப் பழகக் கூடிய அந்த நிர்வாகி ஓர் ஊடகவியலாளரும் கூட.ஊடகக் காட்டில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர்.

ஆனால் அந்த நிர்வாகி தரப்பில் ஒரு பின்னடிப்பு காட்டப்பட்டதால், இறுதி நேரத்தில் தமக்குப் பக்கத்தில் தமது ஊடகப் பணிப்பாளராக இருந்த சுரேன் ராகவனைத் தேர்ந்தெடுத்தார் ஜனாதிபதி.

அதற்கும் காரணங்கள் இருந்தன.

ஒன்று – ராகவன் தமது நம்பிக்கைக்குரியவராக செயற்பட்டு வருகின்றார் என்ற ஜனாதிபதியின் மன நிலைப்பாடு.

அடுத்தது – வடக்குடன் சம்பந்தப்பட்ட தமிழர் தரப்புகளுடன் நெருங்கி ஊடாடக் கூடிய ஒருவரை ஆளுநராக அங்கு வைத்திருந்தால் அவர் மூலம் தமிழர் தரப்பை இலகுவாகக் கையாள முடியும் என்று ஜனாதிபதி கருதியமை.

திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு வாய்ப்பு ஏற்பட்டு, கூட்டு எதிரணி மற்றும் சு.கவின் பொது வேட்பாளராகத் தாம் நிறுத்தப்பட்டால், அச்சமயத்தில் தமிழர் தரப்புடன் ஊடாடி, பேரம் பேசி, அதனைத் தனக்குச் சார்பானதாக வளைததுப்போடுவதற்கு ராகவன் ஆளுநராக இருக்கின்றமை தமக்கு உதவக்கூடும் என ஜனாதிபதி கருதுகின்றார் எனவும் தெரிகின்றது.

சுரேன் ராகவன் ஒரு கல்விமான். சுமந்திரன் போன்றோருடன் நெருக்கமாகவும், சமதையாகவும் உரிமையுடனும் பழகும் தகுதி நிலை கொண்டவர்.

அத்தகையவர் மூலம் தமிழர் தரப்பைக் கையாள்வது இலகு – சுலபம் – என்று கருதியே அவரை அப்பதவிக்கு நியமித்தார் மைத்திரிபால.

சோழியின் குடுமி சும்மா ஆடதல்லவா.....?

- மின்னல் -

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைவாகவே வெடுக்குநாறி மலையை ஆய்வு இடம்பெறுவதாக வவுனியா மாவட்டத்தின் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெடுக்குநாறிமலையை ஆய்வு செய்யும் நோக்கில் தொல்லியல் அதிகாரிகள் நேற்றுக் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்தனர். அவர்களுடன் வவுனியா மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், நெடுங்கேணிப் பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோரும் வெடுக்கு நாறிமலைக்குச் சென்று ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்த ஆய்வை இடைநிறுத்தச் சென்ற ஆலய நிர்வாகத்தினருக்கும் தொல்லியல் திணைக்களத்தினருக்கும் இடையே பேச்சுக்கள் இடம்பெற்றன. அதன் போதே தொல்லியல் திணைக்கள அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீண்டகாலமாக வெடுக்குநாறி மலையின் பிரச்சினை தொடர்கின்றது. இதனால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாமல் பிரதேச மக்கள் இருக்கின்றார்கள் என வவுனியா மாவட்ட அரச அதிபர் ஜனாதிபதி செயலகத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

அதனடிப்படையில் ஜனாதிபதிசெயலகம்தொல்லியல்திணைக்களத்தினரைஉடனடியாகஆய்வை மேற்கொண்டு தரவுகளை தருமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கு அமைவாகவே இந்த ஆய்வை மேற்கொள்கின்றோம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்

அதற்கமைவாக தற்போது வெடுக்குநாறிமலையில் காணப்படும் கல்வெட்டின் எழுத்துக்களைப்பிரதிஎடுக்கும்நடவடிக்கைகளில் தொல்லியல் நிபுணர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஐ)

# இரணைமடு நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளில் குறைபாடு!

## நேற்று அங்கு திடீர் விஜயம் மேற்கொண்ட ஆளுநர் உடன் சீரமைக்குமாறு பணிப்புரை

கிளிநொச்சி, ஜன. 11

கிளிநொச்சிப் பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொண்ட வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று நண்பகல் இரணைமடு நீர்தேக்கத்துக்கு திடீர்க் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.



இதன்போது இரணைமடு நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளில் சில குறைபாடுகள் உள்ளன எனவும், அது தொடர்பில் உரிய அதிகாரிகள் சரியான கண்காணிப்புக்களை மேற்கொள்ளாது அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர் எனவும் அதனாலேயே அண்மையில் கிளிநொச்சி மக்கள் பாரிய இடருக்கு முகம் கொடுத்தனர் எனவும் மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்த ஆளுநர், இது தொடர்பில் உடனடியாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்தார்.

இரணைமடு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளில் காணப்பட்ட குறைபாடுகள்தொடர்பில்நடவடிக்கை எடுக்கவேண்டிய இரு நிறுவனங்கள் இன்னமும் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை அறிந்து கொண்ட ஆளுநர், சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகவே தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அத்தோடு ஐந்து நாள்களுக்கு ஒரு தடவை உரிய அதிகாரிகள் இரணைமடு நீர்த்தேக்கத்துக்கு விஜயம் மேற்கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் பணிப்புரை விடுத்தார்.

ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இதன்போது உடனிருந்தார்.

இதேவேளை, நேற்றுக் காலை கிளிநொச்சி அரச அதிபர் பணிமனைக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநரை அரச அதிபர் உள்ளிட்ட பணிக்குழாமினர் வரவேற்றனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட நிலைமைகள் தொடர்பிலும் அரச அதிகாரிகளுடன் ஆளுநர் ஆராய்ந்தார்.

இதில் முக்கியமாக கிளிநொச்சியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரின் பின்னரான நிலைமைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்ததுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பல விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தார். (ஐ)

# இரணைமடுக்குள விசாரணைக்காக புதிய குழுவை நியமித்தார் ராகவன்

கிளிநொச்சி, ஜன. 11

இரணைமடுக் குளத்தினால் வெள்ள இடர் ஏற்பட்டதா எனவும், அதன் முகாமைத்துவம் தொடர்பிலும் விசாரணை செய்யப் புதிய விசாரணைக் குழுவை நியமித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வெள்ள இடருக்குப் பின்னரான சவால்கள் தொடர்பான கூட்டத்தின்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு ஒன்றின் செயலாளராக இருந்த பொறியியலாளர் இரகுநாதன், நியாப் திட்டத்தில் பணியாற்றிய இந்திரசேன மற்றும் ஆளுநரின் சிபாரிசுக்கு அமைய மொறட்டுவைப் பல்கலைகழகப் பொறியியலாளர் ஒருவருமாக மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் முதற்கட்ட விசாரணை அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.



ஏற்கனவே நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவர் இரணைமடு விடயம் தொடர்பில் ஊடகங்கள் மூலம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதால் அந்தக் குழு நிறுத்தப்பட்டு புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# போலி நாணயத் தாள்களுடன் இளைஞர்கள் இருவர் சிக்கினர்

## சாவகச்சேரி பொலிஸார் அதிரடி



யாழ்ப்பாணம், ஜன. 11

போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்களை விநியோகிக்க முற்பட்ட இரண்டு இளைஞர்களைச் சாவகச்சேரி பொலிஸார் சாமர்த்தியமாக கைதுசெய்துள்ளனர்.

இக்கைதுச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணிக்கு தென்மராட்சி கைதடியில் இடம்பெற்றது எனச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்களை யாழ்ப்பாணப் பகுதியில் விநியோகிப்பதற்கு ஒப்பந்தம் பேசப்படுவதாக மாவட்ட குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் ஜே. ஜெயறோசனுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சாவகச்சேரி பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் இ. சேந்தன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் போலி நாணயத்தாள் விநியோகஸ்தர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைளை முன்னெடுத்தனர்.

இதன்போது யாழ்ப்பாணம்–திருகோணமலை பஸ்ஸில் யாழ். நோக்கி வந்த போலி நாணயத் தாள் விநியோகஸ்தர்கள் இருவரும் கொடிகாமம் பகுதியில் இறங்கி டிப்பர் வாகனம் ஒன்றில் ஏறி கைதடிப்பகுதிக்குச்சென்று நாணயத்தாள்களைக் கைமாற்ற முற்பட்டபோது சாவகச்சேரிபொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேக நபர்களிடம் இருந்து போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்கள் 20 ஐயும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் தொடர்ச்சியாக ஒரு லட்சம் போலி நாணயத் தாள்களை ரூபா முப்பதாயிரத்துக்கு விற்பனை செய்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக சப் இன்ஸ்பெக்டர் இ.சேந்தன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இருவரும் 25, 26 வயதுகளையுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களை குற்றப் புலனாய்வுத்துறையினரிடம் ஒப்படைத்து விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் கூறினர். (ஐ–07)

# ரெஜினோல்ட் குரேக்கு புதிய பதவி

கொழும்பு, ஜன. 11

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் தலைவராக வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.



அத்தோடு சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் ஆளுநராக கடமையாற்றிய நிலுக்கா ஏக்கநாயக்க அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் அவர்களுக்கான பதவிப் பிரமாணம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக நிலுக்கா ஏக்கநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (ஐ)

# மாகாண சபைக் கீதத்தை உருவாக்கிய கலைஞர்களுக்கு நேற்றுக் கௌரவிப்பு











யாழ்ப்பாணம், ஜன. 11

வடக்கு மாகாண சபையின் முதலாவது கீதத்தை உருவாக்கிய கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மாகாண சபையில் நடைபெற்றது.

மாகாண சபையின் பேரவைச் செயலக மாநாட்டு மண்டபத்தில் பேரவைத் தலைவரான சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் இந்நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன்போது மாகாண சபையின் கீதத்தை உருவாக்கிய அனைத்துக் கலைஞர்களும் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் நினைவுப் பரிசுகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் பத்திநாதன், முன்னாள் பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன் , முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, மாகாண முன்னாள் அமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் உட்பட அதிகாரிகள் கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்த நிகழ்வுக்கு சபையின் முன்னாள் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பலருக்கும் அழைப்புக்கள் விடுக்கப்பட்ட போதிலும் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்கள் பலரும் இதில் பங்கேற்கவில்லை. (ஐ–07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மணலைக் கயிறாக திரித்தல்

**நாடாளுமன்றம் மீண்டும் அரசமைப்புப் பேரவையாக – புதிய அரசமைப்பை உருவாக்கும் கட்டமைப்பாக – இன்றைய தினம் கூடுகின்றது.**

**இந்தப் பத்தியில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி –**

**இந்த அரசமைப்பு பேரவையால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 21 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட வழிகாட்டல் குழு சுமார் நூறு தடவைகள் மரதன் அமர்வுகளை நடத்தியும் –**

**அந்த வழிகாட்டல் குழுவினால் அமைக்கப்பட்ட ஏழு உப குழுக்கள் பல்வேறு தடவைகள் கூடி ஆராய்ந்தும் –**

**சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.**

**அந்த இடைக்கால அறிக்கை குறித்து மீண்டும் நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவயாகக் கூடி விவாதித்தது. அதன் விவாதங்கள் சுமார் ஒரு வார காலத்துக்கு மேலாக நீடித்தன.**

**அந்த விவாதங்களின் போது பல்வேறு கட்சிகளும், தரப்புகளும், எம்.பிக்களும் தெரிவித்த கருத்துக்களை உள்வாங்கி, புதிய அரசமைப்பு நகலுக்கான ஒரு வடிவத்தை நிபுணர் குழு தயாரித்து முன்வைத்துள்ளது.**

**அது தயாரிக்கப்பட்டு நீண்ட காலமான போதிலும், அது இன்னும் அரசமைப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கு இடையில் ஒக்ரோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்னெடுக்கப்பட்ட அரசியல் சூழ்ச்சி காரணமாக இலங்கையின் அரசியல் போக்கின் செல்நெறியே தலைகீழாகிவிட்டது.**

**இந்தப் பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமரானமையை அடுத்து, இப்போது திரும்பவும் அரசமைப்புப் பேரவை கூடுகின்றது. முன்னர் கடந்த நவம்பர் 7 ஆம் திகதி அந்தப் பேரவையில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த ஆவணங்கள் சுமார் இரண்டு மாத தாமதத்துக்குப் பின்னர் இன்று சமர்ப்பிக்கப்படுகின்றன.**

**இன்றைய கூட்டத்துக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணத்தில் கூட இணக்கமான நிலைமை இல்லை என்பதுதான் வேதனைக்குரியது.**

**வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தில் பல தரப்புகளும் தெரிவித்த கருத்துகளை உள்வாங்கி நிபுணர் குழுவினால் ஒரு நகல் யாப்புக்கான வடிவம் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் –**

**சில தரப்புகள் அதனை நகல் யாப்பு வடிவமாக ஏற்க மறுத்துக் குழப்பம் பண்ணுவதால் –**

**அப்படிப் பல தரப்புகளும் முன்வைத்த பல்வேறு கருத்துக்களையும் ஒன்று சேர்த்து ஒரு கும்பலான ஆவணங்களாக அவை இன்று அரசமைப்புப் பேரவையின் முன் வைக்கப்படுகின்றன.**

**இன்று இந்த ஆவணங்கள் குறித்தெல்லாம் அதிகம் பேசப்படலாம்.**

**எனினும், அவற்றைப் பரிசீலித்து, ஆராய்ந்து, உறுப்பினர்கள் ஒரு முடிவு கட்டுவதற்கும், தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் ஒரு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அது தவிர்க்க முடியாதது.**

**அதனால், இன்றைய அமர்வுகளில் பின்னர் மீண்டும் அரசமைப்புப் பேரவை சில தினங்கள் கூடிஇந்த ஆவணங்கள் குறித்து விவாதிக்கும்.**

**அங்கு தெரிவிக்கப்படும் கருத்துகளை மீண்டும் உள்வாங்கித் திரும்பவும் அரசமைப்பு உருவாக்கத்துக்கான நகல் வடிவத்தை செப்பனிட்டு அதை அரசமைப்புப் பேரவைக்கு கொண்டு வரும் பணி வழிகாட்டல் குழுவுக்குக் காத்திருக்கும்.**

**இவற்றை நோக்கும்போது –**

**அரசமைப்புப் பேரவை இன்று கூடினாலும் கூட, குறைந்த பட்சம் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான மாதிரி வடிவத்தை – நகலை – இறுதி செய்வதற்கே இன்னும் பல வாரங்கள் அல்லது சில மாதங்கள் காத்திருக்க வேண்டியமை தவிர்க்க முடியாதது என்பது புலனாகும்.**

**இனி, நகல் ஒன்று, மாதிரி யாப்பாக வெளிவந்து –**

**அதனை, அரசமைப்பு உருவாக்கத்துக்கான விவாதத்துக்குரிய அடிப்படையாக அரசமைப்புப் பேரவை ஏற்றுக் கொண்டு –**

**அதனடிப்படையில் அரசமைப்புப் பேரவையிலும், பொது வெளியில் வாதப் பிரதிவாதங்கள் நடத்தி, ஆய்வுகளை மேற்கொண்டு, மக்களின் கருத்துக்களை உள்வாங்கி, குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் அதன் மீது வாக்கெடுப்பு நடத்துவதற்கே நீண்ட காலமாகி விடும் என்பது தெளிவு.**

**அதற்கு முன்னர் தற்போதைய ஜனாதிபதியினதும், நாடாளுமன்றத்தினதும் பதவிக் காலங்கள் முடிவுற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**ஒன்று மட்டும் நிச்சயம், புதிய அரசமைப்பை உருவாக்கும் தற்போதைய முயற்சி மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலையன்றி வேறிலலை.**

# மேற்கு, வடக்கு மாகாண ஆளுநர்கள் எம் மக்கள் கரைசேர உதவவேண்டும்

## அமைச்சர் மனோ கணேசன் கோரிக்கை



கொழும்பு, ஜன. 11

அஸாத்சாலி, சுரேன்ராகவன் ஆகிய என் இரு நெருங்கிய நண்பர்கள், மேல்மாகாணத்துக்கும், வடக்கு மாகாணத்துக்கும் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அரசியல் சச்சரவுகளுக்கு அப்பால், இன்றைய நெருக்கடிகளுக்கு மத்தியில், தமிழ் பேசும் இவர்கள் இருவரும் சிறப்பாகச் சுழியோடி கரை சேர, மக்களையும்கரைசேர்க்கவாழ்த்துகிறேன் எனத் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்-

அஸாத் சாலியும், விக்கிரமபாகு கருணாரத்னவும், நானும் இந்நாட்டின் இருள் சூழ்ந்த நெருக்கடி வேளைகளில் கூட்டாகச் செயற்பட்டுள்ளோம். மிகவும் மோசமான அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளோம். சமாதான சுதந்திரம் மீண்டும் நிலைநாட்டப்பட பின் இன்று எங்கள் பாதைகள் வெவ்வேறு திசைகளில் பயணித்தாலும், மீண்டும் ஒருவேளை இந்நாட்டில் இருள் சூழுமானால் நாமே களத்தில் நிற்போம்.

இன்றைய புதிய பயணத்தில் ஆளுநர் அஸாத் சாலி தமது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்தி கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டத் தமிழ் பேசும் மாணவரது கல்வித் தேவைகளை மேம்படுத்த வேண்டும். அதற்கு என் அமைச்சின் பக்கபலத்துடன், எங்கள் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் முழுமையாகத் துணை நிற்பார்கள் என அவருக்கு நான் தெரிவித்துள்ளேன்.

அதேபோல் நண்பர் சுரேன் ராகவன் நானறிந்த ஒரு ஆழ்ந்த சிந்தனையாளர். தமிழ், சிங்கள, ஆங்கிலப் புலமையாளர். முன்னிலை விவகாரங்கள் தொடர்பில் காத்திரமான நிலைப்பாடுகளை கொண்டுள்ளவர். கொள்கை நிலைப்பாடுகளுக்கும், நடைமுறைக்கும் இடையில் அவர் போராட வேண்டி வரும். சொல்லொணாப் போர் துன்பங்களை அனுபவித்த வடக்கு தமிழ் மக்கள் தொடர்பில், அவருக்கு எனது அமைச்சின் தேசிய ஒருமைப்பாடு, சமூக மேம்பாடு விவகார அங்கங்கள் கைகொடுக்க தயாராக உள்ளதை அவருக்கு நான் அறிவித்துள்ளேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகளுக்கு அரசியலை விட்டுவிட்டு, அவர் வடக்கில் சமூக, பொருளாதார மேம்பாட்டை முன்னெடுப்பார் என நம்புகிறேன் - என்றார். (ஐ)

### வவுனியா தெற்கு வலயத்தின்

# ஏழு ஆசிரியர்களின் இடமாற்றம் நிறுத்தம்

வவுனியா, ஜன. 11

வவுனியா தெற்கு வலயத்தின் செட்டிகுளம் கோட்டத்தில் இருந்து வவுனியா வடக்குக்கு இடமாற்றம் செய்யப்பட்ட 22 ஆசிரியர்களில் 7 ஆசிரியர்களின் இடமாற்றம் நிறுத்தப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.


கடந்த ஆண்டு ஜூலை மாதம் செட்டிகுளம் கோட்டத்துக்கு நியமனம் பெற்றிருந்த 22 ஆசிரியர்களுக்கு இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து வவுனியா வடக்கு வலயத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இதனால் பின்தங்கிய பகுதியான செட்டிகுளம் பகுதியில் ஆசிரியர்கள் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இடமாற்றங்கள் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னரே இடமாற்றச் செயற்பாடுகள் வகுக்கப்பட்டன. செட்டிகுளம் பகுதியில் இடமாற்றம் வழங்குவதாகத் தீர்மானித்த 22 ஆசிரியர்களில் 9 ஆசிரியர்களின் இடமாற்றம் இடைநிறுத்தப்படவுள்ளது. செட்டிகுளம் கோட்டத்துக்கு உட்பட்ட சில பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் காரணமாக அந்த 9 ஆசிரியர்களின் இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஏனையவர்கள் இம்மாதம் முதலாம் திகதி முதல் வவுனியா வடக்கு வலயப் பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். அவர்களது இடத்துக்கு வவுனியா நகரக் கோட்டத்தில் 7 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் - என்றார். (ஐ - 100)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு மகாவலி அதிகார சபை உதவியளிப்பு



கிளிநொச்சி, ஜன. 11

இலங்கை மகாவலி அதிகார சபையின் எச் பிரிவின் அனுசரணையுடன் மக்களால் கையளிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் நேற்று முன் தினம் கிளிநொச்சியை வந்தடைந்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்த வெள்ள நிவாரணம் விவசாயிகளால் மகாவலி அதிகார சபை ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய உள்நாட்டலுல்கள் அமைச்சின்பணிப்புரைக்கமைய இந்த நிவாரணப் பொருள்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளிக்கப்பட்டன.

மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் மகேந்திர அபேவர்த்தன, கிளிநாச்சி மாவட்ட அரசஅதிபரிடம்இந்தநிவாரணப் பொருள்களைக் கையளித்தார்.

## நாளை

**12.01.2019**
**சனிக்கிழமை**

நட்சத்திரம் : உத்திரட்டாதி முழுவதும்
திதி : ஷஷ்டி மு.இ 6.59 வரை
**சுபநேரம் : 3.33 - 5.03 வரை**
**இராகுகாலம் : 9.33 - 11.03 வரை**

# ஒற்றையாட்சித் தீர்வைத் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக எதிர்க்கவேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 11

தமிழ் மக்கள் பலமுறை நிராகரித்த ஒற்றையாட்சியின் அடிப்படையிலான தீர்வையே தமிழர் மீது திணிக்கும் நடவடிக்கையை அரசுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மேற்கொண்டு வருகிறது. ஆகவே ஒற்றையாட்சித் தீர்வைத் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக எதிர்க்கவேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காகச் செயற்படாமல் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் எதிராகவே செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களைப் பொறுத்தவரை பொறுப்புக் கூறல் மற்றும் அரசியல் தீர்வு வேண்டுமென்பதே கோரிக்கையாக இருக்கின்றது. அதனடிப்படையில் சர்வதேச விசாரணையொன்றை அவர்கள் கோரி நிற்கின்றனர். அதேபோன்றே தங்களது அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய தீர்வையும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் தற்போது நடக்கின்ற சம்பவங்கள் அனைத்தும் இதற்கு மாறாகவே காணப்படுகின்றன.

குறிப்பாக பொறுப்புக் கூறல் என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் சர்வதேச விசாரணையோ அல்லது கலப்பு பொறிமுறையோ தேவையில்லை என்றும் உள்நாட்டு விசாரணையே போதுமானது என்றும் கூறப்படும் அதேவேளை, உள்நாட்டு விசாரணை கூட தேவையில்லை என்று கூறும் நிலைமையும் உள்ளது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் தங்களைத் தாங்களே ஆளும் தீர்வைத் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதுடன் அதுவே அவர்களது நீண்டகாலக் கோரிக்கையாகவும் இருக்கின்றது. மேற்படி இந்த இரு விடயங்களையும் முன்னிலைப்படுத்தியே கூட்டமைப்பு மக்களிடம் ஆணையும் கேட்டது. ஆனால் இன்றைக்கு அதற்கு மாறாகவே அவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் அமைந்துள்ளன.

குறிப்பாக அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் மக்கள் கடந்த மூன்று முறை எதிர்த்த ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வையே தற்போதும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். கடந்த காலங்களில் இந்த ஒற்றையாட்சித் தீர்வைக் கொண்டு வருகின்றபோது தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் எதிர்க்கின்ற நிலைமையே இருந்தது.

ஆனால் இன்று தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பினர் அதற்குத் தமது ஆதரவைத் தெரிவித்து அரசுடன் இணைந்து ஒற்றையாட்சித் தீர்வைத் தமிழ் மக்களை ஏமாற்றி அவர்கள் மீது திணிக்க முற்படும் நிலைமையே காணப்படுகின்றது.

ஆகவே இந்த விடயங்களில் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும். அதாவது ஒற்றையாட்சியின் அடிப்படையிலான தீர்வையே ஒருமித்த நாடு என்று கூறிக் கொண்டு வர முயற்சிக்கின்றனர். ஆகையால் ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வை ஒட்டு மொத்த தமிழ் மக்களும் எதிர்க்கவேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற பொறுப்புக் கூறல் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் மக்களை ஏமாற்றி அரசு நினைத்ததைச் செய்வதற்குக் கூட்டமைப்பு இணங்கியுள்ளது. இதனால் தமிழ் மக்களுக்கே பல்வேறு வகையிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இன்றைய நிலைமையில் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக அல்லாமல் அரசுக்காகவே செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றி நடு வீதியில் விட்டிருக்கின்றனர் கூட்டமைப்பினர். ஆகவே இதனையெல்லாம் மக்கள் நன்றாக விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்– என்றார். (ஐ-07)

## இந்து அமைப்புகள் ஆலயங்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். இந்து சமய பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இந்து அமைப்புகள், ஆலயங்களுக்கான கலந்துரையாடல், பேரவையில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செயலாளர் ச.சக்திகிரீவன் தலைமையில் நடைபெறும்.

சிறப்புரைகளை சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்), மறவன்புலவு க.சச்சிதானந்தன், முன்னாள் உதவிப் பதிவாளர் நாயகம் பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயர், ஓய்வு நிலை வடமாகாண பிரதம கணக்காய்வுப் பணிப்பாளர் நா.இராசநாயகம், ஐ.சிவலோகநாதன் ஆகியோர் ஆற்றுவர். (இ)

## நூல், இறுவட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.11

திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய "புத்தாக்க சிறுவர் பாடல் நூல்" மற்றும் பாடல் இறுவட்டு 'சிறகடிக்கும் சிறார்கள்' ஆகிய வற்றின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கட்டுப்பாட்டாளர் (யாழ்.எவ்.எம்) முருகேசு ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி காலநிதி பா.தனபாலனும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபனும் யாழ். மாநகர ஆணையாளர் கவிஞர் இ.த.ஜெயசீலனும் கலந்து கொள்வர். (இ)

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாக முஹமட்டை நியமிக்க அங்கீகாரம்



கொழும்பு, ஜன. 11

தற்போதைய தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம் எம்.எம்.முஹமட்டை தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாக நியமிப்பதற்கு அரசமைப்புச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கடந்த திங்கட்கிழமை கூடிய அரசமைப்புச் சபையில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை வெள்ளிக்கிழமை கூடவுள்ள தேர்தல் ஆணைக்குழு இது தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உதவித் தேர்தல்கள் ஆணையாளராகத் தேர்தல்கள் திணைக்களத்தில் பணியாற்றிய எம்.எம். முஹமட் பின்னர் மாவட்டத் தேர்தல் ஆணையாளர், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம் ஆகிய பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்ப்பாணம், கந்தர்மடம் இந்து சமயப் பேரவையில் கடந்த 7ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வரும் திருமுறை முற்றோதல் தொடர்ந்து 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும் என்று பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் தெரிவித்தார்.

தினசரி அதிகாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை திருமுறை முற்றோதல் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அமைதி நிலை வேண்டியும் தமிழ்த் தலைவர்கள் இடையே ஒற்றுமை நிலவவும் வேண்டியே நாளொரு திருமுறை முற்றோதல் இடம்பெறுகின்றது என்றும் அனைவரும் தங்களுக்கு வசதியான நேரங்களில் பங்கு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ)

## புனரமைத்த கருவேப்பமுறிப்புக் குளம் சந்திரிகாவால் மக்களிடம் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜன. 11

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முல்லைத்தீவுக்கு நேற்று முன் தினம் விஜயம் மேற்கொண்டார்.

அங்கு தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட கருவேப்பமுறிப்புக் குளத்தை அவர் மக்களின் பாவனைக்குக் கையளித்தார்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்ற சந்திரிகா மாலை 4 மணியளவில் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட கருவேப்பமுறிப்பு குளத்தை மக்களிடம் கையளித்தார்.

45 ஏக்கர் விவசாயம் மேற்கொள்ளக் கூடிய இந்தக் குளம் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் 5 கோடி 9 இலட்சத்து 81ஆயிரத்து 378ரூபா நிதிபங்களிப்பில் புனரமைக்கப்பட்டு 190 ஏக்கர் விவசாயம் மேற்கொள்ளக் கூடிய நிலையில் கையளிக்கப்பட்டுள்ளது. (ஐ)


**திருமறைக் கலாமன்றம்**
**கலைத்தூது அழகியல் கல்லூரி**

**எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2019 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பிரதான பாடங்கள்**

- வாய்ப்பாட்டு
- நடனம்
- வீணை
- வயலின்
- புல்லாங்குழல்
- மிருதங்கம்
- ஓர்கன்(கீபோட்)
- கிற்றார்
- ட்றம்
- ஒக்ரோபாட்
- சித்திரம்
- நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

- கூத்து
- கண்டிய நடனம்
- யோகாசனம்
- அழகுக்கலை(முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
- பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவ சித்தாந்தம்)

**துணைப்பாடம்**

- ஆங்கிலம்

✱ இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து 25.01.2019 வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

✱ எமது கல்லூரியின் கிளை இல. 15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலாமுற்றத்தில் இயங்கவுள்ளது. முதற்கட்டமாக நடனம், சித்திரம், ஓர்கன், வயலின் ஆகிய பாடங்கள் இங்கு ஆரம்பமாக உள்ளதால் மாணவர்கள் தமது வசதிக்கேற்ப இங்கும் இணைந்து கொள்ளலாம்.

**மேலதிக விவரங்களுக்கும் தொடர்புகளுக்கும்**
**அதிபர்**
**கலைத்தூது அழகியல் கல்லூரி**

இல 128, டேவிட் வீதி, யாழ்ப்பாணம் தொ.பே. 021 222 9419

இல 15, றக்கா வீதி, யாழ்ப்பாணம் தொ.பே. 021 222 7955

# சீன கடற்படையின் அசுரவேக வளர்ச்சி இந்தியக் கடற்படைத் தளபதி கவலை

புதுடில்லி,ஜன.11

இந்தியப் பெருங்கடலில் அதிகரித்துள்ள சீன ஆதிக்கம் குறித்து கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லம்பா கவலை தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லம்பா இது தொடர்பில் கூறுகையில் –

எந்நேரமும், இந்திய பெருங்கடலின் வடக்கு பகுதியில் 6-8 சீன கடற்படை கப்பல்கள் உள்ளன. கடந்த 200 ஆண்டுகளில் சீனக் கடற்படையைப்போல எந்தவொரு கடற்படையும் அவ்வளவு வேகமாக வளர்ந்திருக்கவில்லை.

அவர்கள் ஒரு சக்தியாக இருக்கிறார்கள், அவர்கள் இங்கு நிரந்தரமாக தங்கியுள்ள சக்தியாக இருக்கிறார்கள்.சீனர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் 80 புதிய கப்பல்களை கடற்படையில் சேர்த்துள்ளனர்.



2008 ஆம் ஆண்டு முதல் சீன கடற்படை இந்தியபெருங்கடல் கடற்பரப்பில் கடற்கொள்ளையர் எதிர்ப்பு சக்தி என்ற போர்வையில் ஒரு நிரந்தர இருப்பாக உள்ளது. ஏதென் வளைகுடாவில் 31 ஆவது கடற்கொள்ளையர் எதிர்ப்பு கடற்படை உள்ளது.

கடற் கொள்ளையர் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக நீர்மூழ்கிக் கப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதி அவர்கள் பயன்படுத்த மிகவும் சாத்தியமான தளம் ஆகும்.

இராணுவத் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு பெரும் தொகையை அவர்கள் செலவிடுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் படைகளை நவீனமயமாக்குகிறார்கள், அவை உத்தரவு அமைப்பை நவீனப்படுத்துகின்றன என கூறி உள்ளார்.

# மூன்று அமைச்சர்கள் அசாமில் பதவி விலகல்

திஸ்பூர்,ஜன.11

அசாமில் முதல் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் தலைமையில் பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. மத் திய அரசு இந்திய குடியுரிமை திருத்தமசோதாவை நிறைவேற்றியதால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அசாம் கணபரிசத் கட்சி பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்து விலகியது.




அதைத்தொடர்ந்து நேற்றுமுன்தினம் அம்மாநில அரசில் அமைச்சர்களாக இருந்த அசாம் கணபரிசத் கட்சியை சேர்ந்த அதுல் போரா, கேசவ் மஹந்தா, பானிபூன்சவுத்ரி ஆகியோர் தங்கள் அமைச்சு பதவியை இராஜினாமா செய்து முதலமைச்சரிடம் தங்கள் இராஜினாமா கடிதங்களைக் கொடுத்தனர்.

# இதயத்தைத் திருடிவிட்டாள் பெண்; பொலிஸிடம் முறையிட்ட இளைஞன்

மும்பை,ஜன.11

மகாராஷ்டிராவில் இளைஞன், பெண் ஒருவர் தனது இதயத்தை திருடிவிட்டாள் எனப் பொலிஸில் புகார் அளித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த வாலிபர் ஒருவர் அருகிலிருந்த பொலிஸ் நிலையத்துக்கு புகார் அளிக்க சென்றார். அவரின் புகாரை பார்த்த பொலிஸார் அதிர்ச்சிக்கு ஆளாகினர்.

புகாரில் தன் இதயத்தை ஒரு பெண் திருடிவிட்டார்; அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு சட்டத்தில் இடமில்லை என பொலிஸார் கூறியும் அந்த வாலிபர் இதனை ஏற்க மறுத்துவிட்டார்.

இதனையடுத்து உயரதிகாரிகள் அந்த வாலிபருக்கு உளவளதுணை அளித்த பின்னர் அந்த வாலிபர் அங்கிருந்து சென்றார். இந்த காதல் படுத்தும் பாடு கொஞ்மா நெஞ்சமா!!

# அயோத்தி நில விவகார வழக்கு; திடீரென விலகினார் நீதிபதி லலித்

புதுடில்லி,ஜன.11


அயோத்தி நில விவகார வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்ட 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் இருந்து நீதிபதி யு.யு. லலித் திடீரென விலகியுள்ளார். இதையடுத்து புதிய நீதிபதியை நியமிக்க வேண்டும் என்பதால் விசாரணை ஜனவரி 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

உத்தரபிரதேசம் அயோத்தியில் உள்ள சர்ச்சைக்குரிய இடம் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பான வழக்கில், சன்னி வக்ஃபு வாரியம், நிர்மோஹி அஹாரா, ராம் லல்லா ஆகிய 3 தரப்பினரும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் கடந்த 2010ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் 14 மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள், உச்ச நீதிமன்றத்தில் அப்போதைய தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு முன்பு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி விசாரணைக்கு வந்தன.

இந்த விவகாரத்தை 3 நீதிபதிகள் அமர்வே விசாரிக்கும் என்று கூறிய நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஒக்டோபர் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். அதன்பின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா ஓய்வு பெற்றுவிட்டார்.

அந்த மேல்முறையீட்டு மனுக்கள், தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், நீதிபதிகள் எஸ்.கே.கவுல், கே.எம்.ஜோசப் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் கடந்த ஆண்டு ஒக்டோபர் 29 இல் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த மனுக்களைப் புதிதாக அமைக்கப்படும் நீதிபதிகளைக் கொண்ட அமர்வு விசாரிக்கும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.



இந்தநிலையில் அயோத்தி வழக்கை விசாரிக்க 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வை உச்ச நீதிமன்றம் இரு தினங்களுக்கு முன்பு நியமித்தது. உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான இந்த அமர்வில் நீதிபதிகள் எஸ்.ஏ பாப்டே, என்.வி.ரமணா, யு.யு.லலித், சந்திரசூட் ஆகியோர் இடம் பெற்றனர். இந்த அமர்வு வழக்கை நேற்று விசாரிக்கும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஆஜரான வழக்கறிஞர் ராஜீவ் தவான், நீதிபதி யு.யு. லலித் அயோத்தி தொடர்பான மற்றொரு வழக்கில் அப்போதைய உ.பி. முதல் வர் கல்யாண் சிங்குக்கு ஆதரவாக வாதாடியதை நினைவு கூர்ந்தார். இதையடுத்து இந்த வழக்கை விசாரிக்கும் அரசியல் சாசன அமர் வில் இருந்து விலகுவதாக நீதிபதி யு.யு.லலித் கூறினார்.

இதைத்தொடர்ந்து புதிய நீதிபதி நியமிக்கப்பட வேண்டிஇருப்பதால் வழக்கு விசாரணையை ஜனவரி 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக நீதிபதிகள் 4 பேரும் தெரிவித்தனர்.

# பள்ளிகளில் 8 ஆம் வகுப்புவரை கட்டாய பாடமாகிறதா இந்தி?

புதுடில்லி,ஜன.11

இந்தியா முழுவதும் பள்ளிகளில் எட்டாம் வகுப்புவரை இந்தி கற்பதை கட்டாயமாக்கும் வகையிலான பரிந்துரை மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்திடம் அளிக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.



இந்தியாவில் புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒன்பது பேர் கொண்ட குழு தனது அறிக்கையை கடந்த ஆண்டு இறுதியில் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பித்திருந்தது.

இந்நிலையில், அந்த அறிக்கையில், இந்தியாவிலுள்ள பள்ளிகளில் எட்டாம் வகுப்புவரை இந்தி மொழிப் பாடத்தை கட்டாயமாக்குவது, அறிவியல், கணிதம் போன்ற பாடங்களுக்கு நாடுமுழுவதும் ஒரேமாதிரியான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவது, திறன் மேம்பாடு சார்ந்த படிப்புகளை வழங்குதல், கல்விக்கென பிரதமர் தலைமையிலான குழுஒன்றை உருவாக்குதல்போன்ற பரிந்துரைகள் இடம்பெற்றுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அஜித் 'கட்டவுட்'டுக்கு பாலாபிஷேகம்; சரிந்து வீழ்ந்து அறுவர் படுகாயம்



நடிகர் அஜித்தின் 60 அடி உயர கட் அவுட்டின் மேல் உட்கார்ந்து பாலாபிஷேகம் செய்து கொண்டிருந்த ரசிகர்கள், திடீரென கட் அவுட் சரிந்து விழுந்ததில் படுகாயம் அடைந்துள்ளனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே நேற்று விஸ்வாசம் படம் வெளியாகியுள்ளது. இதனால் நடிகர் அஜித்குமார் தரப்பு ரசிகர்கள் அனைத்து திரையரங்குகள் முன்பும் பட்டாசுகளை வெடித்து, ஆட்டம் பாட்டம் என கொண்டாடி வருகிறார்கள்.

இந்த படத்தின் சிறப்பு காட்சிகளை காண நள்ளிரவு முதலே ரசிகர்கள் தியேட்டர்கள் முன் கூடிவிட்டனர். எப்போதுமே அஜித் படம் வெளியானால் அவரது ரசிகர்கள் கட்அவுட்டுக்கு மாலை அணிவித்து, பாலாபிஷேகம் செய்து, சூடம் காட்டுவார்கள்.

அப்படித்தான் திருக்கோவிலூர் ஸ்ரீனிவாசா திரையரங்கில் விஸ்வாசம் படத்தை வரவேற்கும் விதமாக 60 அடி உயரத்துக்கு அஜித்தின் உருவகட் அவுட் வைக்கப்பட்டிருந்தது.

இதற்கு பாலாபிஷேகம் செய்ய ரசிகர்கள் பலர் கூடினர். அதில் ஒரு சிலர் கட் அவுட் மீது ஏறி மாலை அணிவித்தனர். பிறகு பாலாபிஷேகம் செய்து கொண்டிருந்தபோது, மேலும் சில ரசிகர்களும் அதே கட் அவுட்டில் ஏற ஆரம்பித்தார்கள்.

இதனால் பாரம் தாங்காமல் அஜீத் கட் அவுட் அப்படியே சரிந்து விழுந்தது. அதிர்ச்சி அடைந்த ரசிகர்கள் கட் அவுட் சரிய சரிய ஒவ்வொருவராக கீழே குதிக்க ஆரம்பித்தார்கள். இதனால் 6 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக சிகிச்சைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# தமிழகத்தில் யாருடன் கூட்டணி? என்ன சொல்கின்றார் மோடி

நாடாளுமன்றத் தேர்தலுக்கு தமிழகத்தில் எந்த கட்சியுடனும் கூட்டணி இல்லை என பிரதமர் நரேந்திர மோடி திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார்.

தமிழகத்தில் உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளில் உள்ள பா.ஜ.க. கட்சியினருடன் பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் கலந்துரையாடல் நடத்தி வருகிறார். இந்த உரையாடலில் பா.ஜ.க. வெற்றி பெறுவதற்கான கருத்துகளை நிர்வாகிகளுடன் பகிர்ந்து கொண்டு வருகிறார்.

அப்போது அவர் கூறுகையில் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் எந்த கட்சியுடனும் பாஜக கூட்டணி அமைக்காது. தமிழகத்தில் கூட்டணிக்கான கதவு திறந்தே இருக்கிறது. மக்களுடன் அமைக்கப்படும் கூட்டணியே வெற்றி பெறும்.

இந்திய அரசியலில் 20 ஆண்டுகளுக்கு முன் வெற்றிகரமாக கூட்டணி அமைத்தவர் வாஜ்பாய். அவர் காட்டிய வழியை பா.ஜ.க. பின்பற்றுகிறது. பாதுகாப்புதுறையை இடைத்தரகர்களின் கூடாரமாக மாற்றிவிட்டது காங்கிரஸ் கட்சி. அக் கட்சி இந்திய ராணுவத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது - என்றார்.

# சிலியில் 3 வாகனங்கள் மோதி விபத்து

## 9 பேர் உயிரிழப்பு,11 பேர் படுகாயம்




சாண்டிகோ,ஜன.11

சிலியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 9 பேர் பலியானதுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

சிலி நாட்டின் தெற்கு பகுதியில் அமைந் துள்ளது லேக் மாவட்டம். இந்த மாவட்டத்தில் உள்ளூர் நேரப்படி பிற்பகல் 2 மணியளவில், மாபில் மற்றும் வல்டிவா ஆகிய இருநகரங் களையும் இணைக்கும் இருவழிச்சாலையில், பயங்கர விபத்து நடைபெற்றது. ஒரு கார், பாரவூர்தி, வான் என மூன்று வாகனங்கள் மோதிக்கொண்டன. இந்த விபத்தில், ஒரு குழந்தை உட்பட 9 பேர் பலியாகினர். 11 பேர் காயம் அடைந்தனர்.

10 மாத கைக்குழந்தை மற்றும் இரண்டு நபர்களுடன் வந்த கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த பாரவூர்தி மீது மோதியுள் ளது. கார் மோதியதில், பாரவூர்தி நிலை தடு மாறி எதிர்த்திசையில் உள்ள சாலைக்கு சென்று அங்கு வந்த வானுடன் மோதியுள்ளது.

காயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனும திக்கப்பட்டுள்ளனர்.

## ‘டிக்டாக்’ வீடியோக்கு அடிமை மனநலம் பாதிக்கப்பட்டார் பெண்



லண்டன்,ஜன.11

டிக்டாக் வீடியோக்களுக்கு அடிமையானதால் பெண் ஒரு வர் மனநலம் பாதிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.

சமூக வலைத்தளங்களில் அதிகமாக ஆதிக்கம் செலுத்தி வரும் டிக் டாக்கில் இளம் தலை முறையினர் எந்நேரமும் மூழ் கியுள்ளனர். டான்ஸ் ஆடுவது, மிமிக்ரி என அவர்கள் செய் யும் அக்கப்போருக்கு அளவே இல்லை.

இந்நிலையில் டிக்டாக்கில் பிரபலமானவர் நீனா. டிக்டாக்கில் நீனாவை 2.7 மில்லியன் பேர் பின் தொடர்கிறார்கள். இவரது நகைச்சுவை வீடியோக்கள் மிகவும் பிரபல்யமானவை. தொடர்ச்சியாக டிக்டாக்கில் இதே போன்று வீடியோக்களை போட்டு வந்ததால் அவர் மனநலம் பாதிக் கப்பட்டுள்ளார்.

## சவுதியிலிருந்து தப்பிவந்த யுவதிக்கு புகலிடம் அளிக்கிறது ஆஸ்திரேலியா!




சிட்னி,ஜன.11

சவுதியிலிருந்து தப்பிவந்த இளம் பெண் ரஹாப் மொகமட் அல் குனானுக்கு அடைக்கலம் அளிப்பது குறித்து ஆஸ்திரே லியா ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய சுகாதாரத்துறை அமைச்சர் கிரேக் ஹண்ட் கூறும்போது, “அவர் ஆஸ்திரேலியாவுக்கு அடைக் கலம் வர வேண்டும் என்று உறுதி யாக நினைத்தால், இதுகுறித்து நாங்கள் அவசரமாக ஆலோசிப் போம். அவருக்கு வழங்கப்பட உள்ள விசா குறித்து ஆலோசிப் போம். இதுகுறித்து குடியுரிமை அமைச்சர் டேவிட்டிடமும் பேசி இருக்கிறேன் என்று தெரிவித்தார்.

ரஹாப்மொகமது அல்குனான் (18) குவைத்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது தனது குடும் பத்தினரிடம் இருந்து தப்பி வந் துள்ளார். தனது குடும்பத்தினர் தன்னை உடல்ரீதியாகவும் மன ரீதியாகவும் கொடுமைப்படுத்தினா ஏனக் கூறிய ரஹாப், ஆஸ்திரே லியா செல்ல முடிவெடுத்து தாய் லாந்தில் உள்ள சுவர்ணபூமி விமான நிலையம் வந்தார். எனி னும் சவுதி மற்றும் குவைத் அதி காரிகள் தன்னை சுற்றி வளைத் தனர் என்றும் தனது பயண ஆவ ணங்களைப் பறித்துக் கொண் டனர் என்றும் தெரிவித்தார்.

இது குறித்து ஞாயிற்றுக் கிழமை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்ட ரஹாப், “குவைத்துக்கு என்னை நாடு கடத்துவதற்காக குவைத் ஏர்வேஸ் விமானத்தில் அனுப்ப முடிவு செய்திருக்கின்ற னர். இதை நிறுத்துமாறு தாய் லாந்து அரசிடம் கேட்கிறேன். தாய் லாந்து காவல்துறையினர் எனக் குப் புகலிடம் அளிக்கும் பணிக ளைத் தொடங்க வேண்டும். மனி தத்தோடு எனக்கு உதவுமாறு இறைஞ்சிக் கேட்கிறேன்” என்று தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து அப் பெண்ணின் தந்தை அப் பெண் ணைத் திரும்ப அனுப்பி வைக் கும்படி கூறியிருந்த நிலையில் இந்த விவகாரத்தில் புகலிடம் கேட்கும் ஒருவரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கும்போது, அவரை சொந்த நாட்டுக்கு அனுப் பக்கூடாது என ஐக்கிய நாடுகளின் அகதிகள் முகமை அறிக்கையை வெளி யிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மெக்சிக்கோ எல்லை தடுப்பு சுவர் விவகாரம்:

## எதிர்க்கட்சி எம்.பிக்களின் கூட்டத்திலிருந்து கோபாவேசத்துடன் வெளியேறினார் ட்ரம்ப்



வொஷிங்டன்,ஜன.11

மெக்சிக்கோ எல்லைப்பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் விவகாரத்தில் எதிர்க் கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆவேசமாக வெளியேறியுள்ளார்.

அமெரிக்காவுக்குள் சட்ட விரோத மாக ஊடுருவும் வெளிநாட்டவரை தடுக்க மெக்சிக்கோ எல்லையில் சுவர் கட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார். அதற்காக 570 கோடி டொலர் நிதி ஒதுக்கும்படி அமெரிக்க நாடாளுமன்றத்திடம் ஒப்புதல் கேட் டார்.

அதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆதரவு வழங்கவில்லை. அதனால் ஆண்டு வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறை வேறவில்லை. இதனால் சுமார் 20 நாள்களாக அரசு அலுவலகங்கள் செயல்படாமல் முடங்கி கிடக்கின்றன.

இந்நிலையில், ஜனநாயக கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர்கள் ஆலோ சனை கூட்டத்துக்கு ட்ரம்ப் ஏற்பாடு செய்தார். வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சுமுக முடிவு எட்டப்படும் என எதிர் பார்க்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் ஜனநாயக கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற மேல்சபை தலைவர் நான்சி பெலோசி மற்றும் சிறுபான்மை குழுவை சேர்ந்த உறுப்பினர் சக் ஸ்குமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தின்போது டிரம்ப் சில நிபந்த னைகளை விதித்தார். இதை நான்சி பெலோசி ஏற்க மறுத்தார். நிதி முடக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கும் உங்கள் கோரிக்கைக்கு நான் சம்மதம் தெரிவித்தால் தடுப்புச் சுவர் திட்டத் துக்கு ஒப்புதல் தர நீங்கள் முன்வருவீர்களா? என ட்ரம்ப் கேட்டதற்கு நான்சி பெலோசி ‘முடி யாது’ என்று தெரிவித்தார்.

இதனால், ஆத்திரமடைந்த டிரம்ப் ‘பை பை’ என்று கூறிவிட்டு ஆவேசமாக கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

பின்னர் இதுதொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்ட டிரம்ப், ‘நான்சி பெலோஸ்கி மற்றும் சக் ஸ்குமர் ஆகியோருடன் இன்று நடந்த ஆலோசனை கூட்டம் ஒட்டுமொத்த நேர விரயம் (total waste of time) என்று பதி விட்டார்.

இந்த சந்திப்புக்கு பின்னர் வெள்ளை மாளிகை வாசலில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த பெலோசி, ‘வெளியே இவ்வளவு குளிராக இருக்கிறது. ஆனால், உள்ளே அவ்வளவு கதகதப்பாக இல்லை’ என்றார்.

ட்ரம்ப் மேசையை தட்டி ஆவேசமாக பேசினார் எனவும் அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை என்பதால் மிகுந்த ஆத்திரத்துடன் அவர் வெளி யேறினார் எனவும் ஸ்குமர் குறிப்பிட்டார்.

## அமெரிக்காவுடனான பேச்சை இரத்துச் செய்த தலிபான்கள்



டோகா,ஜன.11

அமெரிக்காவுடனான அமைதிப் பேச்சு வார்த்தையை தலிபான்கள் இரத்து செய்துவிட் டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கர வாதிகளுக்கு எதிராக போரிட்டு வரும் அமெ ரிக்கா, அங்கு அமைதியை ஏற்படுத்தும் வித மாக தலிபான்களுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது. இதற்கு தலிபான்களும் சம்மதித்தனர். அமெரிக்க அதிகாரிகள் மற்றும் தலிபான்கள் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தையை சவுதி அரேபியாவில் நடத்த முடிவு செய்யப்பட்டது.


ஆனால் தலிபான்களோ கத்தார் தலைநகர் டோகாவில்தான் அமைதிப் பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர். அமெரிக்கா அதனை ஏற்றுக்கொண்டது.

அதன்படி இருதரப்புக்கும் இடையேயான 2 நாள் பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் தொடங்க இருந்தது. ஆனால் தலிபான்கள் இதில் பங்கேற்க முடியாது எனக்கூறி அமைதிப் பேச்சுவார்த்தையை இரத்து செய்துவிட்டனர். அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்பான செயல் திட்டத்தில் தலிபான்களுக்கு உடன்பாடு இல் லாததால் அவர்கள் இந்த முடிவை எடுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைதிப்பேச்சுவார்த்தையில் ஆப்கானிஸ் தான் அதிகாரிகள் பங்கேற்க தலிபான்கள் எதிர்ப்பு தெரிவித்தனர் என்றும் கூறப்படுகிறது.







# மைத்திரியின் போக்கும் சிறுபான்மை இனங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சமும்

சுஐப் எம்.காசிம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்லும் மைத்திரியின் நகர்வுகள், சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்கால நகர்வுகளுக்கு அச்சுறுத்தலாக அமையப் போகின்றன. இதற்கான மைத்திரியின் அண்மைக் கால காய் நகர்த்தல்கள்இந்தஅச்சங்களைவெளிப்படுத்துகின்றன.

பௌத்தத்தின் மடியில் தொப்பென விழுந்து வளர்ந்த வரலாறும், ஆரம்பமாகி ஐந்து வருடங்களுக்குள் தனிச்சிங்களச் சட்டத்தை, மூலதனமாக்கி அதிகாரம், ஆட்சிக்கு வந்த பெருமையும் சுதந்திரக் கட்சிக்குத் தான் உண்டு. இதனால் இக்கட்சியை இனவாத உணர்வுகளுக்கான பெரும்பான்மை வடிகாலாகவும் ஒரு காலத்தில் சிலர் கருதினர். பின்னர் நாட்பட்டுப்போன சித்தாந்தங்களை சீர்திருத்தி மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான இக்கட்சியின் வியூகங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் வழிசமைத்ததால் சந்திரிகாவுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் ராஜபக்ஷவின் வியூகங்கள் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பௌத்த தேசியவாதக் கட்சியாக வளர்த் தெடுத்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய தலைமையும், வடக்கு, கிழக்கு தொடர்பில் ராஜபக்ஷாக்கள் கொண்டிருந்த நிலைப்பாடுகளும் சுதந்திரக் கட்சியை தென்னிலங்கை அரசியலுக்குள்ளும் நிலைப்படுத்தியது. இவர்களின் அரசியல் நிலைப்பாடுகள் ஒரு சமூகத்தின் உரிமைக்கும், மற்றொரு சிறுபான்மைச் சமூகத்தின் மத உணர்வுகளுக்கும் குறி



ஜனநாயகத்தின் போர்வையில் குடும்ப அதிகாரம் தாண்டவமாடிய அரசைத் தோற்கடிக்க 2015 இல் ஏற்படுத்தப்பட்ட அமைதிப்புரட்சிக்கான ஆணையின் ஆயுள்காலம் இன்னும் ஒன்றரை வருடங்களிலே முடிவடையவுள்ளது. இதற்கிடை யில் எவ்வாறான பின்புலத்திலிருந்து இந்த ஆணைகளை மீறமைத்திரி முயற் சிக்கிறார்? ஏன் இதற்கு அவசரப்படுகிறார்.? எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பிரபல்யம் தேடும் வழிகளைத்தேடி வாய்க்காலில் விழுந்த கதைக்கே இவரின் அவசரம் அழைத்துச் செல்லவுள்ளது.

வைத்துக் குழிபறித்ததால் 2015 இல் அதிரடி மாற்றத்துக்கான அவசியங்களை தமிழ் மொழிச் சமூகங்கள் உணர்ந்தன.

இந்த வியூகத்தால் ஜனாதிபதியாக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேனவின், தற்போதைய புதிய போக்குகள் சிறுபான்மையினரை மட்டுமன்றி, ஐந்து வருடங்களுக்கு ஆணை வழங்கிய 61 இலட்சம் பேரையும் பெரும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது. நிறைவேற்று அதிகாரத்தின் அதலபாதாளத்துக்குள் முத்துக்குளிக்கும் மைத்திரிபால சிறிசேன, இந்த இராட்சத அதிகாரத்திலுள்ள ஆபத்துக்களை உணராமலிருக்க முடியாது. 19 ஆவது திருத்தத்திற்கு முன்னரும் இந்த அதிகாரத்தை சமருக்கு இழுக்கும் வழிமுறை நாடாளுமன்றத்திலிருந்து வருகிறது.

மதிப்பிழப்புப் பிரேரணை (Impeachment) ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பும் முறை இதற்கு முன்னர் வெற்றியளிக்கவில்லைதான். ஆனால் இம்முறை சாத்தியப்படாது என்று சொல்லுமளவிற்கு மைத்திரிக்கு நாடாளுமன்றப்பலமில்லை. எனவே ஒரு ஜனாதிபதியை, நாடாளுமன்றத்திலுள்ள எம்.பிக்களின் பலங்களே பாதுகாப்பதைப் புரிந்து கொள்ளலாம். தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அவர் விதித்துள்ள கட்டுப்பாடுகளும், ஸ்ரீலங்கா பொது ஜனப் பெரமுனவுடன் மைத்திரி ஏற்படுத்த முனையும் உறவுகளும் ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு இவர் மீதுள்ள அதிருப்தியும் முத்துக்குளித்தலில் மைத்திரிக்கு அவதானத்தை ஏற்படுத்தியிருக்கும்.

### கைகூடாத முயற்சி

ஜனநாயகத்தின் போர்வையில் குடும்ப அதிகாரம் தாண்டவமாடிய அரசைத் தோற்கடிக்க 2015 இல் ஏற்படுத்தப்பட்ட அமைதிப்புரட்சிக்கான ஆணையின் ஆயுள்காலம் இன்னும் ஒன்றரை வருடங்களிலே முடிவடையவுள்ளது. இதற்கிடையில் எவ்வாறான பின்புலத்திலிருந்து இந்த ஆணைகளை மீறமைத்திரி முயற்சிக்கிறார்? ஏன் இதற்கு அவசரப்படுகிறார்.? எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பிரபல்யம் தேடும் வழிகளைத்தேடி வாய்க்காலில் விழுந்த கதைக்கே இவரின் அவசரம் அழைத்துச் செல்லவுள்ளது.

மஹிந்தவின் கடும்போக்கு முகாமுக்குள் குடியிருந்து அரசியல் ஆயுளை நீடிக்கும் இவரது முயற்சிகள், இப்போதைய கள நிலவரங்களுக்கு ஒரு போதும் கைகூடப்போவதில்லை.

சுதந்திரக் கட்சியிலுள்ள எத்தனை இலட்சம் வாக்குகளை இவரால் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவுக்குப் பெற்றுத் தர முடியுமென்ற ஐயமும், இவ்விரு கட்சிகளின் தலைமையில் உருவாகவுள்ள பொதுக் கூட்டணிக்குள் ஏற்படச்சாத்தியமான தலைமைத்துவ நெருக்கடிகளும் ஐக்கிய தேசிய முன்னணிக்கே வாய்ப்

## மஹிந்தவுடன் இணைந்து ஆயுளை நீடிக்கும் அவரது இராஜ தந்திரத்தால் கேடு நிச்சயம்

பாகி வருகின்றன.

அரசியலில் தாங்கள் மஹிந்தவும் இல்லை, மைத்திரியும் இல்லை. அஷ்ரஃபின் வழிகாட்டலை அடியொற்றிச் செல்லும் முஸ்லிம் தலைமைகள் எனக்கூறும் தேசிய காங்கிரஸும், மட்டக்களப்பிலுள்ள வெகுஜன அரசியல்வாதியும், திருமலையில் மௌன விரதமிருக்கும் முன்னாள் முதல்வரும், வன்னியில் வியூகம் வகுக்கும் முன்னாள் பிரதியமைச்சரும் மைத்திரியின் இப்போக்குகளால், வழி தெரியாது விழி பிதுங்குவர்.

தீர்மானிக்கும் சக்திகளும், பின்புலங்களும் தென்னிலங்கையிலே உள்ளமையால் அலைக்குள் அள்ளப்படும் அதிகாரத்துக்குள் காலத்தை ஓட்ட எடுக்கப்படும் இவர்களின் கடும் பிரயத்தனங்கள் கிழக்கில் குதர்க்கக் கோஷங்களாக்கப்படலாம். இவ்வாறு ஆக்கப்பட்டால் முஸ்லிம்களின் ஆணைக்கெதிரான கூட்டாக இத்தலைவர்கள் காட்டப்படலாம். இவ்வளவு பெரிய சமூக சவால்களை சமாளித்து களத்தில் குதிப்பது கிழக்கில் இவர்களால் சாத்தியமாகாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முஸ்லிம் சம்மேளனத் தலைவராகச் செயற்பட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முஸ்லிம்களின் பாதுகாப்புக் கூடாரமாகக் காட்டித்திரிந்த பௌஸியும் மைத்திரியின் கடும்போக்கில் அதிப்தியுற்றாரோ? இல்லை - இந்த அரசிலாவது முஸ்லிம்களுக்குத் தீர்வு கிடைக்கட்டுமே என ஆசைப்பட்டாரோ? அல்லது சுதந்திரக்கட்சியின் தந்திரங்களைப் புரிந்து கொண்டாரோ? விடை பெற்று விட்டார். புதிய அரசமைப்பில் தமிழ் மொழிச்சமூகங்கள் எழுச்சியடையுமென அச்சப்படும் மஹிந்த, கடும்போக்குஅணிக்குள் சரணடைந்து அதிகாரத்தை கொய்யமுனையும் மைத்திரி, இவர்களை விட ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நகர்வுகள் ஆறுதளித்தமையால் பச்சைக்குள் பாய்ந்துவிட்டார் பௌஸி.

இனியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரியணை ஆசைக்கு முஸ்லிம்கள் முட்டுக் கொடுக்கப் போவதில்லை. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதில் முஸ்லிம்களுக்கு குறிப்பாக, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு ஆறுதல்தான். இந்த ஆறுதலை ஆயுள்கால அரசியல் மூலதனமாக முதலிடுவதற்கு ராஜபக்ஷ முயலக்கூடாது என்பதே முஸ்லிம்களின் நிலைப்பாடு. ராஜபக்ஷவின் இனவாத மூலதனமே, மீண்டும் தமிழ், முஸ்லிம் தலைமைகளை ஒன்றிக்க வைத்துள்ளது. இந்த ஒற்றுமைக்கான அடித்தளம் 2015 இல் இடப்பட்டது.

புலிகளின் போராட்டம் வழிதவறியதையே முஸ்லிம்கள் எதிர்த்தனர். தமிழ் மொழிச்சமூகங்களின் பிரச்சினைகள், சமதரப்பு மேசையில் உள்வாங்கப்படுவதை சிறுபான்மைத் தலைமைகள் விரும்புவதால் சகுனம் சரிப்படவுள்ளது. இந்தச் சந்தர்ப்பமும், நல்ல சகுனமும் மைத்திரியின் கடும்போக்கு வாதத்தை நோக்கிய பயணத்தில் பிழைத்துப் போகலாம் என்பதே முஸ்லிம்களின் இன்றைய அச்சம். எல்லோரையும் எடுத்தெறிந்து பேசி, விரட்டியடிக்கும் தொனியில் பேசும் ராஜபக்ஷவின் வியூகத்திற்குள், இனவாதிகளுக்கான கொழுத்த முதலீடும், கொள்ளை இலாபமும் இருக்கும் என்பதே இன்றைய புரிதல். இந்தப்புரிதலில் முஸ்லிம் தலைமைகள் செய்ய வேண்டிய பணிகள் பற்றி இனி ஆராய்வோம். *

# தேர்தலுக்கு ஐ.தே.க. தயாராகவே உள்ளது

## கூறுகின்றார் அமைச்சர் கிரியெல்ல

கொழும்பு, ஜன. 10

எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுப்பதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது. என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுதாக்கல், 27 /2 இன்கீழான கேள்வி உட்பட தினப்பணிகள் முடிவடைந்த பின்னர், மாகாணசபை எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் தினேஸ் குணவர்தன எம்.பி. கருத்து வெளியிட்டார்.

அவ்வேளையில், தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சுகின்றதா என வாசுதேவ நாணயக்கார எம்.பி., சபை முதல்வரிடம் வினா தொடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர்,

மாகாணசபைத் தேர்தல் மட்டுமல்ல ஜனாதிபதித் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

மாகாணசபைத்தேர்தலைபழைய முறைப்படி (விகிதாசாரமுறைப் படி நடத்துவது குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந் துரையாடப்பட்டது. இணக்கமும் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, பழையமுறைப்படி தேர்தலை நடத்து வதற்கு அரசு தயார். - என்றார்.

## முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு பொருள்கள் வழங்கினார் சந்திரிகா



முல்லைத்தீவு, ஜன. 11

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு வைத்தியசாலைக்கு தேவையான ஒரு தொகுதி பொருள்களைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியுடன் அமைச்சின் அதிகாரிகள் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பதவிநிலை அதிகாரிகள், வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கவனிப்பாரற்று இருக்கும் பாற்பண்ணைக் கட்டடம்




வவுனியா, ஜன. 11

வவுனியா மரக்காரம்பளையில் சுமார் 4கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட நவீன பால்பண்ணைத் தொழிற்சாலை கவனிப்பாரற்ற நிலையில் பற்றைகள் மூடி இருப்பதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குளவிகளும், குரங்குகளும் குடிகொள்ளும் குகையாக மாறிவருவதாக வேதனை தெரிவிக்கும் அவர்கள், பொறுப்பான அதிகாரிகள் இதுவரை இதனை இயங்க வைப்பதற்கு ஏன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனவும் ஆதங்கப்படுகின்றனர்.

நீண்டகாலம் பயன்படாமல் இருக்கின்றமையால், இத் தொழிற்சாலையில் உள்ள பெறுமதிமிக்க இயந்திரப் பாகங்கள் பழுதடையும் நிலையில் உள்ளன. இந்தத் தொழிற்சாலை ஒரு நாளைக்கு 1500 லீற்றர் பால் பதனிடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால் வவுனியா கால்நடை வளர்ப்பாளர்கள், மற்றும் பொதுமக்கள் மிகவும் பயனடையக்கூடிய நிலை இருக்கிறது.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் கரிசனை கொண்டு மக்களின் நலனுக்காக நல்லதொரு தீர்வைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனப் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரியுள்ளனர்.

இந்தப் பால்பண்ணை சர்வதேச நிறுவனங்களான ஒக்பாம், யூ.எஸ். எய்ட், யு.என்.டி.பி ஆகியவற்றின் 4 கோடி ரூபாவுக்கும் அதிகளவான நிதியில் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்களின் சமாசத் தலைவர் எஸ்.கந்தசாமியிடம் கேட்டபோது,

இந்தப் பாற்பண்ணயை இயங்க வைப்பதில் நிதியே பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. குறிப்பாக உற்பத்தி அலுவலர் ஒருவரைப் பணிக்கு அமர்த்த வேண்டும் அதனை விட 5 ஊழியர்களும் நியமிக்கப்பட வேண்டும்.

அவர்களுக்குச் சம்பளம் வழங்கவேண்டிய தேவையிருக்கிறது. இயந்திரங்களில் காணப்படும் சிறிய பழுதுகள் திருத்தப்பட வேண்டியிருக்கின்றன. இந்தப் பாற்பண்ணை இயங்கினால் வவுனியா மாவட்டத்துக்கு மிகவும் பயனுள்ளதாகவே அமையும். அதனை நாம் நன்கு அறிவோம். அதனை இயக்குவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறோம். ஒரு சில மாதங்கள் அதனை இயக்குவதற்கான நிதி வசதிகள் கிடைத்தாலே போதும்.பின்னர் சுழற்சிமுறையில் அதனைத் தொடர்ந்து நடத்தமுடியும். அதன் பெறுமதி எமக்கு விளங்கும். எனவே விமர்சனங்களை முன்வைப்பவர்கள் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளவேண்டும் - என்றார். (ஐ)

## ஆசிரியர்கள் பற்றாக்குறை எதிர்காலத்தில் நீக்கப்படும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 11

கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை எதிர்காலத்தில் நீக்கப்படும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி - கரந்தெனியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

தற்போது மேற்படி பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை பல பாடசாலைகளில் நிலவுகிறது. இதனைத் தீர்ப்பதற்கு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன்படி விரைவில் இந்த பாடங்களில் பயிற்றப் பட்டவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளார்கள் - என்றார். (ஐ)

## பதவி விலகினார் கீர்த்தி தென்னக்கோன்

கொழும்பு, ஜன. 11

ஊவா மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள கீர்த்தி தென்னக்கோன் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியிலிருந்து இராஜினாமா செய்கிறார் என அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று முன்தினம் ஊவா மாகாணத்துக்கான ஆளுநராக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே தான் ஜனாதிபதியின் நியமனத்தை ஏற்றுக் கொள்வதாகவும் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாகவும் தெரிவித்துள்ளார்.

# சகோதரப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

## முல்லைத்தீவு றோ.க. மகளிர் பாடசாலையில்





முல்லைத்தீவு, ஜன. 11

முல்லைத்தீவுக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலையில் இடம்பெற்ற சகோதர பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தில் பிரதம அதிதியாகப் பங்கேற்றார்.

அங்கு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் அவர் வழங்கினார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜா உள்ளிட்ட அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். இந்து வரலாற்றுச் சாதனை

## 42 ஆண்டுகளின் பின் தேசியச் சம்பியன்







யாழ்ப்பாணம், ஜன. 11

இலங்கைக் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய 19 வயதிற்குட்பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட அணி வரலாற்றுச் சாதனையாக தேசிய சம்பியனாகியுள்ளது.

இறுதிப் போட்டியில் கொழும்பு தர்ம பால கல்லூரியை எதிர்த்து ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 74 : 39 என்ற புள்ளிக் கணக்கில் அபார வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இந்தத் தொடரின் சிறந்த தாக்குதல் ஆட்டக்காரராக (Offensive Player) சஞ்சயனும், தொடரின் பெறுமதிமிக்க வீரராக (Most Valuable Player) கீர்த்தனனும் தெரிவு செய்யப் பட்டனர்.

இலங்கை கூடைப்பந்தாட்ட வரலாற்றில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 19 வயதுப் பிரிவு அணி ஒன்று முதல் தடவையாக தேசிய மட்டத்தில் சம்பியனாகியிருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இத் தொடரில் 3ஆம் இடத்தை மற்றொரு யாழ் மாவட்ட அணியான கொக்குவில் இந்து அணி பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றியீட்டிய அணி வீரர்களுக்கான வரவேற்பு நிகழ்வு கல்லூரி அதிபர் சதா.நிமலன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கூடைப்பந்தாட்ட அணி வீரர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கௌரவிப்பு நிகழ்வு கல்லூரி மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

1977 இல் 42 வருடங்களுக்கு முன்னர் -பிரபல விளையாட்டு வீரர் எம்.எஸ்.தயாளனின் தலைமையின் கீழ் யாழ். இந்துக் கல்லூரி அணி இதே சுற்றுப் போட்டியில் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

### சிங்கர் கிண்ண சுற்றுப் போட்டி

# யாழ்.இந்துவிடம் வீழ்ந்தது ஸ்ரான்லி





இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு III இக்கான சிங்கர் கிண்ண சுற்றுப்போட்டியில் தரம் I இல் விளையாடிவரும் யாழ் இந்துக் கல்லூரி அணி, ஸ்ரான்லி கல்லூரி அணியை, கோமைந்தனின் வீழ்த்தப் படாத சதத்தின் துணையுடன் இன்னிங்ஸால் வெற்றி கொண்டது.

ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இரண்டு நாள்களைக் கொண்ட போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரான்லிஅணி, யாழ் இந்துவை துடுப்பெடுத்தாட அழைத்தது.

துடுப்பெடுத்தாடுவதற்கு களம் நுழைந்த இந்துக் கல்லூரியினர் 14 ஓவர்களில் மந்தகதியில் 25 ஓட்டங்களை சேகரித்திருந்த வேளையில் முதலாவது விக்கெட்டினை பறிகொடுத்தனர். அணி 36 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் 20 ஓட்டங்களுடன் பிருந்தாவன் ஆட்டமிழந்தார். மூன்றாவது இலக்கத்தில் களம் புகுந்த தனுஸ்ரன் ஒரு முனையில் காத்திருக்க மறு முனையில் விக்கெட்டுக்கள் விரைவாக சாய்க்கப்பட 52 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து இந்துக் கல்லூரி அணியினர் தடுமாறினர்.

ஆறாவது இலக்கத்தில் களம் வந்த வலதுகை துடுப்பாட்ட வீரர் கோமைந்தன் தனுஸ்ரனுடன் இணைந்து சத இணைப்பாட்டமொன்றினை பெற்றிருந்த வேளையில் 6 ஆவது விக்கெட்டாக நிதானமாக துடுப்பாடிக்கொண்டிருந்த தனுஸ்ரன் (44) ஓய்வறை திரும்பினார்.

அதிரடியாக துடுப்பாடிய கோமைந்தன் சதம் கடந்தார். அணி 244 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் அணியின் ஏழாவது விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. தொடர்ந்தும் நேர்த்தியாக துடுப்பாடிய கோமைந்தன் 150 ஓட்டங்களை தொட இந்துக் கல்லூரி ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டது.

52 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இந்துக் கல்லூரியை 172 பந்துகளில் 16 பவுண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக ஆட்டமிழக்காமல் 151 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து மீட்டெடுத்திருந்தார் கோமைந்தன்.

பதிலுக்கு களமிறங்கிய ஸ்ரான்லி கல்லூரி அணியினரால் 49 ஓட்டங்களை மாத்திரமே முதலாவது இன்னிங்ஸுக்காக பெற முடிந்தது. பந்துவீச்சில் அணியில் தலைவர் ஜங்கரன் 6 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை சாய்க்க, கோமைந்தன், மதுமிலன் மற்றும் கோபிராமுக்கு தலா 2 விக்கெட்டுக்கள் கிடைத்தன.

தொடர்ந்தும் இரண்டாவது இன்னிங்ஸுக்கு துடுப்பெடுத்தாடுமாறு பணிக்கப்பட்ட ஸ்ரான்லி கல்லூரியினர் 108 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் இளைய வீரர் கஜன் மற்றும் இடதுகை சுழல் பந்துவீச்சாளர் கோபிராம் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர். இதன்மூலம் ஸ்ரான்லி கல்லூரியை யாழ் இந்துக் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 111 ஓட்டங்களால் இலகுவாக வீழ்த்தியது.




# நியூஸிலாந்தில் ருத்ர தாண்டவமாடிய திசர பெரேரா தரவரிசையில் முன்னேற்றம்

நியூசிலாந்து அணியுடனான கடைசி இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் தனியொரு வீரராக துடுப்பாட்டத்தில் ருத்ரதாண்டவம் ஆடி நியூசிலாந்து பந்துவீச்சாளர்களை வெளுத்து வாங்கி சாதனைகள் பலவற்றை நிலைநாட்டிய திசர பெரேரா, ஐ.சி.சியின் ஒருநாள் வீரர்களுக்கான தரவரிசையில் அசுர முன்னேற்றத்தைக் கண்டுள்ளார்.

அத்துடன், இத்தொடரில் இலங்கை சார்பாக ஓட்டங்களைக் குவித்த நிரோஷன் திக்வெல்ல, குசல் ஜனித் பெரேரா, தனுஷ்க குணதிலக்க ஆகியோரும் முன்னேறியுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை ஒரு நாள் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் (09) வெளியிட்டுள்ளது.

ஐ.சி.சி வெளியிட்ட ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில், திசர பெரேரா 22 இடங்கள் முன்னேறி 65ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்தத் தொடரில் 240 ஓட்டங்களை ஒட்டுமொத்தமாகக் குவித்த அவர், ஐ.சி.சியின் துடுப்பாட்ட வீரர்களுக்கான புள்ளிகள் பட்டியலில் 509 புள்ளிகளைப் பெற்று தனது சிறந்த துடுப்பாட்ட முன்னேற்றத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இதேநேரம், இலங்கை அணியின் இளம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணதிலக்கதரவரிசையில் 11 இடங்கள் முன்னேறி, 82ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

மற்றுமொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான நிரோஷன் திக்வெல்ல ஓரிடம் முன்னேறி 26 ஆவதுஇடத்தைப் பெற்றுக்கொள்ள, ஏழு இடங்கள் முன்னேற்றம் கண்ட குசல் ஜனித் பெரேரா 66ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

இதேநேரம், நியூசிலாந்து அணி சார்பில் பந்துவீச்சில் பிரகாசித்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்த சுழல் பந்துவீச்சாளர் இஷ் சோதி, 26 இடங்கள் முன்னேற்றம் கண்டு 31 ஆவது இடத்தையும், சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் 23 இடங்கள் உயர்ந்து 85ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

அத்துடன், 2 போட்டிகளில் மாத்திரம் விளையாடி 6 விக்கெட்டுக்களை கைப்பற்றிய வேகப்பந்துவீச்சாளர் லூக்கி பெர்கியூசன் 12 இடங்கள் முன்னேற்றம் கண்டு பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் அதே 31ஆவது இடத்தை இஷ்சோதியுடன் பகிர்ந்துகொண்டுள்ளார்.

இதேவேளை, துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் விராட் கோஹ்லி முதலிடத்திலும், ரோஹித் சர்மா இரண்டாம் இடத்திலும், ரொஸ் டெய்லர் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்திய வேகப் பந்துவீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா முதலிடத்திலும், ரஷீத் கான் இரண்டாவது இடத்திலும், குல்தீப் யாதவ் மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

## போர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச விசாரணையால் நாட்டின் இறைமை ஒருபோதும் பாதிக்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

போர்க்காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவே பல சந்தர்ப்பங்களில் தான் சர்வதேச விசாரணைக்கு முகங்கொடுக்கத் தயாராக உள்ளேன் எனக் கூறியுள்ளார். அவருக்கு அந்தத் தைரியம் உள்ள தென்றால் அரசு ஏன் அஞ்சுகின்றது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டவரைவு மற்றும் ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுதல் சட்டவரைவு தொடர்பான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த அரசு ஆட்சிக்கு வந்து நான்குஆண்டுகளில்ஏன்இன்னமும் உண்மைகளைக் கண்டறியவில்லை? கொலை செய்தவர்கள் ஏன் கைதுசெய்யப்படவில்லை? சட்டத்தின் முன் ஏன் நிறுத்தப்படவில்லை?

இந்த அரசு குற்றவாளிகளைத் தண்டிக்கும் நோக்கத்தில் இல்லை என்பதே உண்மையாகும்.

தமிழர்கள் என்ற காரணத்தால் அல்லது சிறுபான்மை என்ற காரணத்தால் சட்டம் சுயாதீனமாகச் செயற்படாது உள்ளமையே பிரச்சினையை ஏற்படுத்துகின்றது.

பிரதான இரண்டு கட்சிகளும் அரசியல் நெருக்கடியில் ஈடுபட்ட போது நீதிமன்றத்தை நாடிய வேளையில் சட்ட சுயாதீனம் பற்றிப் பேசினீர்கள். உங்களின் பிரச்சினையில் சுயாதீனம் பற்றிப் பேசும் நீங்கள் ஏன் தமிழர் விடயத்தில் அதே சுயாதீனம் குறித்துப் பேச மறுக்கின்றீர்கள்? இதுவே நாமும் சர்வதேசத்தை நாடக் காரணமாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் அரச தரப்புக்கும் ஆயுதப்படைக்கும் இடையில் நடைபெற்ற போரில் இரண்டுதரப்பும் குற்றம் செய்துள்ளன என்று சர்வதேச நாடுகள் கூறியுள்ளன.

எனவே, குற்றத்தில் ஈடுபட்ட தரப்புவிசாரணைநடத்த முடியாது. அது சுயாதீனம் அல்ல. ஆகவே, சர்வதேச நடுநிலையுடன் விசாரணைகளை நடத்தவேண்டும்.

உண்மைகளைக் கண்டறிய வேண்டும். குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்றால் அது குறித்து உண்மைகளைத் தெரிவிக்க வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை, உண்மைகளை மூடி மறைக்கவே வெட்கப்பட வேண்டும்.

இந்த அரசு சட்டத்தையும் நீதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்ட விரும்புகின்றது என்றால் – சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் தாம் நியாயமான ஆட்சியாளர்கள் என வெளிப் படுத்த வேண்டும் என்றால் போர்க்குற்ற உண்மைகளைக் கண்டறிய சர்வதேச நடுநிலையுடன் விசாரணைகளை நடத்திக்காட்ட வேண்டும் – என்றார். (ஐ)

## அரசியல் கைதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்கச்சியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சிவசீலன் என்ற அரசியல் கைதியே தன்னை விடுவிக்குமாறு வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் கடந்த இரு தினங்கள் தண்ணீர் அருந்துவதைக்கூடத் தவிர்த்திருந்தார். இதையடுத்தே அவரின் உடல்நிலை மேலும் மோசமடைந்துள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவரது தந்தையார் கடந்த சில தினங்களின் முன்னர் காலமாகியிருந்தார். அதற்காகச் சில மணித்தியாலங்கள் விடுமுறை அவருக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேசத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 45ஆம் ஆண்டுநினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தப் படுகொலைக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. அதே போல இலங்கை அரசு செய்த இனப்படுகொலைகளுக்கும் இதுவரை நீதி கிடைக்கவில்லை.

இன்று அரசியல் தீர்வு கேள்விக்குறியாக உள்ள நிலையில் சர்வதேசஅழுத்தத்தின் ஊடாகவே நாமும் அரசியல் தீர்வைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவேதமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற நிலைமை ஏற்பட வேண்டும் அதனை நாம் வென்றெடுக்கவேண்டும் – என்றார். (ஐ–07)

## 6 பேரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனங்காணப்பட்ட இரண்டு பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்துத்தீர்ப்பளித்துள்ளது.பெரலஸ்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த மிகல் ஜூலிகே பிரசன்ன பெரேரா மற்றும் சம்பர் பொன்னாண்டோ ஆகிய இருவருக்கே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு செப்ரெம்பர்மாதம் 12ஆம்திகதி பெரலஸ்கமுவ பிரதேசத்தில் வாகனம் ஒன்றுக்குள் 6 பேரைச்சுட்டுக்கொலை செய்தமை மற்றும் அதற்குச் சதித்திட்டம் தீட்டியமை தொடர்பாக நால்வருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் மிகல் ஜூலிகே பிரசன்ன பெரேராமற்றும்சம்பர்பொன்னாண்டோ ஆகிய இருவரையும் நீதிபதி கிஹான் குலதுங்க குற்றவாளிகளாக அறிவித்துத்தீர்ப்பளித்தார்.

அதன்படி இருவருக்கும் தூக்குத்தண்டனை விதித்து தீர்ப்பளித்த நீதிபதி ஏனைய இருவரையும் குற்றமற்றவர்களாக விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

## ஜனாதிபதி வேட்பாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரியே களமிறங்குவார் என மஹிந்த சமரசிங்க அறிவித்துள்ள நிலையிலேயே மஹிந்த மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர்யார்என்பதை மஹிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடயில்இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுஜனபெரமுனதற்போது தேர்தல் கூட்டணிக்காக 29 கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே எந்தவொரு கூட்டணி அமைத்தாலும் அது தாமரை மொட்டுச் சின்னத்தின் கீழேயே ஏற்படுத்தப்படும் எனப் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவர்களையும் நிபந்தனையுடன் ஊர்காவற்துறை நீதிமன்றம் விடுவித்துள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த இரண்டு தடவைகளில் எட்டு இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துஇலங்கைக்கடற்படையினரால்கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த 7ஆம் திகதி நான்கு மீனவர்களும், மறுநாள் 8ஆம் திகதி நான்கு மீனவர்களும் கடற்படையினரால்கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை நீரியல் வளத்துறை யாழ். அதிகாரிகள் ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் ஏ. யூட்சன் முன்னிலையில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இந்த மீனவர்களை எல்லை தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் ஏ.யூட்சன், எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுமென்ற நிபந்தனையுடன்விடுதலைசெய்ய உத்தரவு பிறப்பித்தார். (ஐ–07)

## 12ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கில் 12ஆவது சந்தேகநபர் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது காணாமற்போன ஒருவரின் தாய் மற்றும் சகோதரியால் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் கொமாண்டர்சுந்தனபிரசாத்ஹெட்டியாராச்சி உள்ளிட்ட 3 சந்தேகநபர்களும் மீண்டும்விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி சந்தேகநபர்களை மீண்டும் எதிர்வரும் 23ஆம் திகதிஅடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## ஜனாதிபதிவேட்பாளராக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த ஆண்டுதேர்தல் ஆண்டு என்றும், கட்சியின் யோசனை மைத்திரிபாலசிறிசேனபொதுவேட்பாளராக வேண்டும் என்பதே என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அது வேட்புமனு வழங்கும் தினத்துக்கு முன்தினமே தீர்மானிக்கப்படும்என்றும்ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு அன்று இருந்த பலம் அதேபோன்று இன்றும் இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு ஜனவரி 08ஆம் திகதிக்குமுன்னர் இடம்பெறவேண்டும் என்றும், ஒக்ரோபர் இறுதியில் வேட்புமனு பொறுப்பேற்கப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## சம்பந்தனைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தனைக் கொழும்பில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடிய இரா.சம்பந்தன், சட்டத்துக்கும் நீதிக்கும் முரணான சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுவதை ஆளுநர் அனுமதிக்கக்கூடாது என்றும் முக்கிய விடயங்கள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளின்ஆலோசனையுடனான முடிவுகள் எட்டப்படுவதானது தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்க்கும் என்றும் தெரிவித்த அதேவேளை, அரச நிர்வாக நியமனங்கள் வழங்கப்படும்போது அனைத்து மக்களும் சமமாக நடத்தப்படுத்தல் கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் வாழும் பல்லின மக்களிடையே காணப்பட்ட இன விரிசல்களை இல்லாமல் செய்வதற்கு உதவும் எனவும் தெரிவித்தார்.

அனைத்து இன மக்களின் அபிலாஷைகளையும்பூர்த்திசெய்யும் வகையில் புதிய ஆளுநரும் அவரது நிர்வாகமும் செயற்பட வேண்டும் என இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டார். (ஐ)

## விசாரணைகளின்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டை வெளிப்படுத்த நீதிமன்றங்களை நாடும் வாய்ப்பு இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ச்சியாக நீடிக்கப்பட, அவர்கள் 15 வருடங்களாகச் சிறையில் அடைபட்டுள்ளனர். இது நியாயமா?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது ஜே.வி.பி.

நாடாளுமன்றில்நேற்று இடம் பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு என்ற வகையில் நாம் மனிதஉரிமைகளைப்பாதுகாக்கவும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவும், அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதற்குச் சர்வதேசத்தின் தலையீடு அவசியமில்லை.

நாட்டில் போர் நடைபெற்ற காலத்தில்பயங்கரவாதத்தடைச்சட்டம் நடைமுறையில் இருந்ததை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இன்று போர் முடிவடைந்து 9 வருடங்கள் கடந்து விட்டன.

தற்போதும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டியதில்லை. ஆனால் அரசு அதனை நீடித்துத் தன், அடக்குமுறைகளுக்குப் பயன் படுத்துகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டபலர்விசாரணைகள் இன்றி வருடக்கணக்கில் சிறையில் வாழ்கின்றனர்.

அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்த நீதிமன்றங்களைநாடும்வாய்ப்புஇல்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ச்சியாக நீடிக்கப்பட, அவர்கள் 15 வருடங்களாகச் சிறையில் அடைபட்டுள்ளனர்.இதுநியாயமா?

குறைந்தது நீதிமன்றத்தின் ஊடாக தாம் குற்றவாளியா, நிரபராதியா என்று தெரிந்துகொள்ளவும் முடியாதுள்ளனர். அவர்கள் குற்றவாளி என்றால் தண்டனை வழங்குவது நியாயமானது. இது ஒன்றும் இல்லாமல் நிரபராதி ஒருவர் 10 வருடமாகச் சிறையில் இருப்பது சாதாரணமானதா?

பலர் 3 மாதம் சிறையில் இருக்க முடியாமல், போராட்டம் நடத்தும் நிலையில், அரசியல் கைதிகளின் நிலையை யோசித்துப் பாருங்கள்.

எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். ஆனால் அது ஐ.நா சபைக்கு ஏற்றாற்போல் அல்ல. அதற்காக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டதாக ஐ.நாவுக்கு கூறி, சிறு சிறு மாற்றங்களைச் செய்து அதனை இன்னும் பலப்படுத்தி வேறு ஒரு சரத்தாகக் கொண்டு வரக்கூடாது – என்றார். (ஐ)

## 9 மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே தினத்தில் 9 மாகாணங்களுக்கும் தேர்தலை நடத்தவேண்டும் என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜனநாயக விரோத அரசுக்கு எதிராகச் செயற்பட்ட சிவில் சமூக அமைப்புக்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாணசபைத் தேர்தலை எந்த முறைமையில் நடத்துவது என்பதே தற்போது காணப்படும் பிரச்சினையாகும்.

இந்த விடயத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இது தொடர்பில்தீர்மானிக்கவேண்டும். புதிய முறையுடன் விகிதாசார முறைமையும் உள்ளடக்கித் தேர்தலை நடத்தவேண்டும். அல்லது பழைய முறையில் தேர்தலை நடத்தவேண்டும்.

அதுகுறித்த சட்டவரைவை நிறைவேற்றி 9 மாகாணங்களுக்குமான தேர்தலை ஒரே தினத்தில் நடத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் – என்றார். (ஐ)

## அரசியல் சதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்போம்.

– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

ஜனநாயகத்தை வென்றது போலபொருளாதாரப்பிரச்சினைகளையும் வென்றெடுப்போம். மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வரவு – செலவுத் திட்டத்தை விரைவில் நிறைவேற்று வோம் எனவும் அவர் உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்துவரும் ரூபாவின் பெறுமதியை ஸ்திரப்படுத்த இந்தியா உதவி செய்யவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று கூடிய நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள நாட்டைக் கட்டியெழுப்பும் வகையில் இந்திய மத்திய வங்கி 400 மில்லியன் டொலர் நிதியை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் சதியால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கு முன்பிருந்த நிலையிலும் உன்னத இடத்துக்குக் கொண்டு செல்லும்பொறுப்புஎம்முடையது. ஆனால் அது அவ்வளவு இலகுவான விடயமல்ல .

ஐக்கிய தேசிய முன்னணி, 2015 ஆம் ஆண்டில் ஆட்சியை பொறுப்பேற்கும்போது, நாடு கடன்பொறிக்குள்சிக்கியிருந்தது. அதிலிருந்து தற்போது மீண்டு வருகின்றோம். எனினும், இந்த வருடத்தில் பல பொருளாதாரச் சவால்கள் காத்திருக்கின்றன.

2019ஆம்ஆண்டில்செலுத்த வேண்டிய மொத்தக் கடனின் பெறுமதி (வட்டி அடங்கலாக) 5 ஆயிரத்து 900 அமெரிக்க டொலர்களென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையானதுதற்போதைய அரசால் பெறப்பட்ட கடன் அல்ல.

அதேபோல், ஜனவரி மாதம் 14 ஆம் திகதி 2 ஆயிரத்து 600 அமெரிக்க டொலர்களை கடனுக்காகச் செலுத்தவேண்டியுள்ளது. இலங்கை வரலாற்றில் செலுத்தப்படும் அதிகூடிய கடன்தொகை இதுவாகும் – என்றார். (ஐ)

# விக்கியின் கருத்துகள் குறித்து மௌனம் காக்கின்றது அரசு!



கருணா அம்மான் சீற்றம்

கொழும்பு, ஜன. 11

வடக்கிலுள்ள இராணுவத்தினர் தொடர்பாக வடக்கு முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்து வரும் இனவாதக் கருத்துக்கள் தொடர்பாக அரசு எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்காமல் மௌனம் காத்து வருகிறது என விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கிலுள்ள மக்கள் படையினர் மீது பெரும் மரியாதையும்,பக்தியும் கொண்டுள்ளனர். அண்மையில் வடக்கில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம் பெயர்ந்த மக்களுக்கு தேவையான உதவிகளைப் படையினரே மேற்கொண்டனர்.

படையினர் பயங்கரவாதிகளுக்கு எதிராகவே போரை நடத்தினர்,தமிழ் மக்களுக்கு எதிராக அல்லர். அவர்கள் பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்தனர். உண்மையான வீரர்கள் அவர்களேயாவர். ஆனால் விக்னேஸ்வரன் படையினர் தொடர்பாக விமர்சித்து வருகிறார். எனினும் தமது உண்மையான பாதுகாவலர் யார் என்பது வடக்கு மக்களுக்குத் தெரியும்.

இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு வடக்கு மக்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர். அவர்கள் இராணுவத்தினர் மீது மிகுந்த மரியாதையை வைத்துள்ளனர். ஆனால் இராணுவம் தொடர்பில் விக்னேஸ்வரன் தொடர்ச்சியாக இனவாதக் கருத்துக்களை வெளியிட்டுவருகிறார்.ஆனால் இது தொடர்பில் அரசு மௌனம் காத்து வருகிறது. இவ்வாறு சாதாரண ஒரு பொதுமகன் அறிக்கை வெளியிட்டிருந்தால் அவர் அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டிருப்பார் – என்றார். (ஐ)

## அரசியல் கருத்தரங்கு

யாழ். அரசியல் ஆர்வலர் கழகத்தின் ஏற்பாட்டில் "கருத்துக்களால் களமாடுவோம்" எனும் அரசியல் கருத் தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

"தமிழ்தேசியப்பிரச்சினைக்குஜனநாயக வழி முறைகளினூடாகத் தீர்வும் தமிழ்த் தலைமையின் வகிபாகமும்" எனும் தலைப்பில், சிவில் சமூக பிரதிநிதிகளின் வாதங்களுக்கு பதிலுரைக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். (இ)

## தூக்குத்தண்டனைக் கைதிகள் 1299 பேர் சிறைச்சாலைகளில்

மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு மேன்முறையீடு செய்துள்ள 1,299 கைதிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அவர்களில் 1,215 ஆண்களும் 84 பெண்களும் உள்ளடங்கின்றனர். இவர்களில் 789 ஆண் கைதிகளும், 34 பெண் கைதிகளும் மேன்முறையீடு செய்துள்ளனர்.

மரணதண்டனைக்கு உட்படுத்தியே ஆகவேண்டும் என்ற 476 கைதிகள் உள்ளனர் எனவும், அவர்களில் 426 ஆண்களும் 50 பெண்களும் அடங்குகின்றனர் எனவும் கூறப்படுகிறது. (ஐ)


யாழ்ப்பாணம் அரசியல் ஆர்வலர் குழாம் நடாத்தும்

கருத்துக்களால் களமாடுவோம்

அரசியல் கருத்தரங்கு



தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கு ஜனநாயக வழிமுறைகளினூடாகத் தீர்வும் தமிழ்த் தலைமையின் வகிபாகமும்

சிவில் சமூக பிரதிநிதிகளின் வாதங்களிற்கு பதிலுரையாற்றுகின்றார்

பாராளுமன்ற உறுப்பினர்

மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன்

(ஜனாதிபதி சட்டத்தரணி)

காலம் : 12.01.2019 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3:00 மணி
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

அனைவரும் வருக !

களத்தில்.............

அகவணக்கம்
ஈகச்சுடரேற்றல்

வரவேற்புரை
உயர்திரு.சந்திரலிங்கம் சுகிர்தன்
(முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாணசபை)

தலைமையுரை
உயர்திரு.சந்திரமௌலீசன் லலீசன்
(பிரதி அதிபர், ஆசிரியர் கலாசாலை -கோப்பாய்)

கருத்துரைகள்
பிரம்மஸ்ரீ.ப.மனோகரக்குருக்கள்
(பிரதமகுரு, சிவன்கோவில் - வல்வெட்டித்துறை)
அதிவண.டானியல் தியாகராஜா
(பேராயர், தென்னிந்தியத் திருச்சபை - யாழ்ப்பாணம் அத்தியட்சாதீனம்)
கலாநிதி.சுப்பிரமணியம் சிவகுமார்
(பொறியியல் பீடம் - பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் )
வைத்தியர்.தங்கமுத்து சத்தியமூர்த்தி
(பணிப்பாளர், போதனாவைத்தியசாலை - யாழ்ப்பாணம்)
உயர்திரு.நடேசபிள்ளை வித்தியாதரன்
(மூத்த ஊடகவியலாளர்)

பதிலுரை
பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ.மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன்
(ஜனாதிபதி சட்டத்தரணி)

நன்றியுரை
உயர்திரு.சிவராஜா கஜன்
(அரசியல் ஆர்வலர்)

நிகழ்ச்சித்தொகுப்பு
சட்டத்தரணி. கேசவன் சயந்தன்
(முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாணசபை)


## தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை; 45 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று



யாழ்ப்பாணம், ஜன. 11

உலகத் தமிழாராச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 45 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப் பட்டது.

படுகொலை செய்யப்பட்டவர்களில் நினைவாக யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக முற்றவெளி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா, யாழ் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் மற்றும் அரசியல் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ – 07)

## மன்னாரில் சிக்கியது பெருந்தொகை கஞ்சா

### சந்தேகநபரும் கைது



மன்னார்,ஜன.11

மன்னார் – வங்காலைக் கடற்பரப் பில் 184.2 கிலோகிராம் கேரளக் கஞ் சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை முன்னெடுக் கப்பட்ட சுற்றிவளைப் பின்போது இந் தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என இலங்கைக் கடற்படை அறிவித் துள்ளது.

இதேவேளை, சந்தேகநபரையும் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவையும் மன்னார் பொலிஸாரிடம் ஒப் படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.